980
2-61

REGISTERED No. M. 6165. ந. பை. 13

பத்ஹுல் இஸ்லாம்

FATH-HUL-ISLAM

மாத பத்திரிகை

ஜூன்—1961.

விஷயம்.	பக்கம்.
உயர்ந்தோர் யார்? தாழ்ந்தோர் யார்? ...	1
திருக் குர்ஆன் சார சங்கிரஹம் (ரஹ்மத் பாகவி)	7
பதருன்னிஸா (தொடர் கதை) (ஏ. ஆர். கமால்)	11
கபி நாயகம் (அ. அப்துல் வஹ்ஹாப்) ...	19
ஹஜ்ரத் க்வாஜா மூஈனுத்தீன் ஜீவிய சரிதை (டி. எப். ஆர். மஆலி ஸாஹிப் பாகவி)	21
அழகு ராணி—ஹுஸ்ன் ஆரா (சிறுவர் பகுதி) ...ப். ரஹ்மத்துல்லா-மஆலி ஸாஹிப் (பாகவி)	27

...ஸ்லாம் ஆபீஸ்:
...ரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

JL
[illegible]
187083

பத்ஹுல் இஸ்லாம்.

சந்தா விபரம்: இந்தியா, பாகிஸ்தான், ஸிலோனுக்கு
வருஷ சந்தா ரூ. 1-50
தனிப் பிரதி நயா பைஸா 0-13
மற்ற வெளி நாடுகளுக்கு வருஷ சந்தா ரூ. 2-00

எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. எல்லா விஷயங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
பத்ஹுல் இஸ்லாம்,
20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.

பாஸோவின் மர்மம்

இது ஒரு அருமையான துப்பறியும் கதை. இதில் ஒரு பாங்கை மோசம் செய்ய சிலர் எத்தனித்ததையும் அது கைகூடா வண்ணம் செய்து அவர்களின் திருட்டு யோசனைகளை வெளியாக்கிய துப்பறியும் ஷம்ஸின் செயல்களும் விளக்கப்பட்டுள்ளது.

இதன் விலை ரூ. 0-52

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
கெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.

الاسلام

பத்ஹுல் இஸ்லாம்

ஜூன்—1961.

உயர்ந்தோர் யார்? தாழ்ந்தோர் யார்?

உலகில் மனிதர்கள் தங்களை இரண்டு வகையினராக பகுத்துக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர். மனிதர் வாழ்வு மட்டுமல்ல, ஒவ்வொரு விஷயமுமே பொதுவாக இரண்டிரண்டாகவே பகுக்கப்பட்டிருக்கின்றன. ஆணென்றும் பெண்ணென்றும் சகல உயிரினங்களும் பகுக்கப்பட்டிருக்கின்றன.

இவ்வாறே உலகில் மனிதர்கள், தங்களை பணக்காரர் என்றும் ஏழை என்றும் இரண்டு வகையினராக கூறிக் கொள்கின்றனர். இன்னோர் தங்களை உயர்ந்தோர் என்றும் தாழ்ந்தோர் என்றும் பிரித்துக் கூறிக் கொள்கின்றனர்.

'ஹக்' என்றும் 'பாத்தில்' என்றும் சத்தியம் அசத்தியம் இரண்டு வகையாய் பிரிக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறே பேச்சுகளும் விஷயங்களும் மெய் என்றும் பொய் என்றும் பிரிக்கப்பட்டிருக்கின்றன. 'ஹக்கீகத்' என்றும் 'மஜாஸி' என்றும் உண்மையும் போலியும் பிரிக்கப்பட்டிருக்கின்றன. பொதுவாக எல்லாவற்றிலுமே நல்லதும் உண்டு கெட்டதும் உண்டு.

* * * *

அஃதெல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும். உலகப் பொது வாழ்வில் மாந்தர், தங்களை உயர்ந்தோர் என்றும் தாழ்ந்தோர் என்றும் பாகு படுத்திக் கொண்டு வாழ்ந்து வருகின்றனரே, இதைச் சற்று ஆழ்ந்து சிந்தித்துப் பார்ப்போம்:—

அதோ, அந்தப்பக்கம் பெரிய பெரிய மாளிகைகள் காணப்படுகின்றன. தங்கமும் வெள்ளியும் அங்கு ஆபரணங்களாகவும் அலங்காரப் பொருட்களாகவும் குவிந்து கிடக்கின்றன. பட்டும் பீதாம்பரமும் ஆடை அணிகளாக மலிந்துகிடக்கின்றன. ஏவல் புரியப் பணியாட்களும் ஊழியர்களும் காத்துக் கொண்டு கிடக்கின்றனர். உல்லாசப் பிரயாணத்திற்கு அழகான அலங்கார வண்டி வாகனங்கள் எப்போதும் காத்துக் கொண்டிருக்கின்றன. அந்த அரண்மனையாகிய பங்களாவைச் சூழ்ந்து இன்பமான இளங்காற்று வீசும் மரஞ் செடிகளும், பழந்தரும் தோட்டங்களும் வியாபித்திருக்கின்றன. பூக்கள் நறுமணம் வீசிக் கொண்டும், கனிகள் கனிந்து உதிர்ந்து கொண்டும் இருக்கின்றன. உண்ணவும் பருகவும் பலப்பல விதமான ஆகாரங்களும் பானங்களும் மிகுந்து கிடக்கின்றன. உறங்கவும் அமரவும் மென்மையான மெத்தை நாற்காலிகளும் கட்டில்களும் அரியணைகளும் விரிந்துகிடக்கின்றன. அருகில் அமர்ந்து அன்பு மொழிப் பேசவும், கவலைப்போக்கி ஆனந்தம் அளிக்கவும் அப்சரஸ் போன்ற வாழ்க்கைத் துணைவியரும் அருகில் இருக்கின்றனர். மழலை மொழி பேசி மனதை மகிழச் செய்யும் அன்பு உருவங்களான குழந்தைகளும் சிறு பிள்ளைகளும் மக்கட் செல்வங்களாக குறு நடை புரிந்து கொண்டிருக்கின்றன. அள்ளி அள்ளிச் செலவிட்டாலும் குறையாமல் வற்றாமல் குவிந்து கிடக்கும் பணமும் காசும் வருவாயும் மிக மிக அபரிமிதமாய் இருக்கின்றன.

இந்தச் செல்வங்களைப் பாக்கியமாய் பெற்றவர்கள் தங்களை "உயர்ந்தோர்" என்று சொல்லிக் கொண்டு பெருமை பாராட்டிக் கொள்கின்றனர். இந்தச் சாதனங்கள் குறைவாக இருப்பவர்களை அதாவது தங்கள் உந்நத உல்லாஸ நிலைக்கு சமமாக இல்லாதவர்களை தங்களினும் "தாழ்ந்தவர்கள்" என்று கழித்து ஏளனப் பார்வை பார்க்கின்றனர். ஏழை எளியோர், தங்களைத் தேடி வந்தால் அவர்கள் முன் தங்கள் ஆடம்பரங்களையும் ஆர்ப்பாட்டங்களையும் காட்டிக் கொண்டு, அகங்கார வாழ்வு வாழ்கின்றனர். அவர்களுக்கு ஏதேனும்

187083

பண உதவியோ சகாயமோ செய்து, தங்களுக்குக் கீழ்ப்பட்டவர்களாய் செய்து வைத்துக் கொள்ள திட்டம் போடுகின்றனர்.

இதே தோரணையில், தங்கள் உல்லாச அரண்மனை வாயிலில் (பங்களா கேட்டில்) யாரேனும் ஏழை பசிக்கிறது என்று ஏதேனும் கேட்க வந்தால், அவனை மிக கேவலமாய்ப் பாவித்து பிச்சை கூட போடாமல் 'போ — போ' என்று விரட்டித் துரத்துகின்றனர். அங்ஙனம் விரட்டுவதற்குக் கூட தாங்கள் முன் வராமல், வாயில் காக்கும் கூர்க்க சிப்பாயை நியமித்து விரட்டித் துரத்துகின்றனர்; அல்லது பெரிய பெரிய நாய்களை கட்டிப் போட்டு, யாரும் உள்ளே வராமற்படி குலைத்துக் கொண்டிருக்கும்படி ஏற்பாடு செய்கின்றனர். அந்த நாய்க்கு தினமும் உணவுக்கும் வசதிக்கும் ஐந்தாறு ரூபாய்கள் செலவு செய்கின்றனர்; அதைப் பேணிப் பாதுகாக்க வேலையாட்களையும் சம்பளத்துக்கு நியமிக்கின்றனர். ஆனால், ஒரு பிச்சைக்காரனோ, ஏழை எளியவனோ தன் பங்களா (அரண்மனை) வாசலுக்கும் வராமற்படி இத்துணை ஆர்ப்பாட்டம் செய்து வாழ்கின்றனர்.

மேற் கூறிய இட வசதியும் பெருந்தனமும் பணியாட்களும் பெரு வாழ்வும் உடையவர்கள் தங்களை "உயர்ந்தவர்கள்" (High Class) என்று சொல்லிக் கொள்கின்றனர். அவர்கள் தங்கள் அந்தஸ்து போன்ற அந்தஸ்து உள்ளவர்களுடன் தான் பழகுகின்றனர். பணத்திலும் வண்டி வாகனத்திலும் தங்களைப் போல் சமநிலையில் இல்லாதவர்களிடம் சகஜமாய்ப் பேசுவதற்கும் அவர்கள் இணங்குவதில்லை.

* * * *

உண்மையில் இப்படிப்பட்டவர்கள் உயர்ந்தவர்களா? இவர்களல்லாத மற்றையோர் தாழ்ந்தவர்களா? இவர்களையே நேரில் இதற்குக் காரணம் கேட்டுப் பாருங்கள். "ஆம், நாங்கள் உயர்ந்தவர்கள் தான். பழம் நிறைந்த நல்ல மரம் போல் நாங்கள் இருக்கிறோம்; பல்லோர் எங்களால் பிரயோஜனம் அடைகிறார்கள். பழம் மலிந்த ஆலமரத்தில் பட்சிகள் வந்து அடைந்து வாழ்வது போல், எளியோர்—தாழ்ந்தோர் எல்லோரும் வந்து கூடி பயன் அடைகின்றனர். இனிய பழம் தராத இலவ மரத்தையும், எட்டி மரத்தையும் யாரேனும் அணுகுகிறார்களா? எந்தப் பட்சியேனும் அங்குப் போய் தங்குகின்றதா? இல்லை! இது போல் தான் நாங்கள். மனிதர்களிலே உன்னத நிலையில்

இருக்கின்றோம். ஆகையால் நாங்கள் உயர்ந்தவர்கள் தான், மற்ற வர்கள் தாழ்ந்தவர்கள் தான்" என்று தர்க்க ரீதியில் விவாதம் செய்ய வும் அவர்கள் ஆயத்தமாய் இருக்கின்றனர்.

அவர்கள் அடைந்துள்ள செல்வமும் பாக்கியமும் ஆடம் பரமும், எப்போதும் சதமானதா? அவைகளுக்கு அழிவு கிடை யாதா? அவர்களது உடலில் உள்ள 'யௌவனம்' எப்போதும் நிலைத் திருக்குமா? அழகும் தேஜஸும் மாறுமல் இருக்குமா? கை கால் களில் பலம் குறையாமல் இருக்குமா? எல்லோருக்கும் வயது ஆக ஆக மூப்பும் வயோதிகமும் வருவது போல் 'தள்ளாமை' அவர் களை வந்து பீடித்துக் கொள்ளாதா? அங்ஙனம் வயோதிக தசை யடைந்து விட்டால், கால் ஓய்ந்து, உடல் சோர்ந்து, மனம் நெகிழ்ந்து மூலையில் உட்காரும் அவதி நிலை அவர்களுக்கு வாராதா? அவ்வாறே சில நாள் அவதியுற்று அவர்கள், உடல் ஓய்ந்து கண் மூடி மரித்துப் போக வேண்டியது தானே! அப்போது அவர்களின் உடல், 'நாற்றப்பிண்டமாய்' மாறி விடாதா? அந்த நாற்ற உடலை வீட்டில் வைக்கக் கூடாதென்று கப்ரிஸ்தானில் கொண்டு போய் மண்ணில் புதைத்து விடத்தானே போகிறார்கள். அப்போது, அவர்கள் தங்களை உயர்ந்தோர் என்று கூறிக் கொள்ள வாய் உண்டா? உயிர் நீத்த சரீரம் (பிணம்) உயர்ந்தது என்று சொன்னால் யாரேனும் ஏற்றுக் கொள்வார்களா? அந்தோ! உயார்ந்தோர் எங்கே?

* * * *

இனி தாழ்ந்தோர் யார்? வசதியான வீடு வாசல் இல்லாத வர்கள், ஆடம்பர ஆடைகளும் அலங்கார உடைகளும் அணிந்து கொள்ள வசதி இல்லாதவர்கள் தாழ்ந்தவர்களாம்! மோட்டார், சைக்கிள் முதலிய வண்டி வாகன மின்றி தெருவில் நடந்து போகிறவர்கள் தாழ்ந்தவர்களாம். தினமும் நெய்யும் பாலும் மாமி சமும் மீனும் முட்டையும் நெய்யில் சமைத்துண்ண வசதியில்லாத ஏழை எளியோர் தாழ்ந்தவர்களாம். நினைத்த போது, பாங்கில் போய் பணம் எடுத்து இஷ்டம் போல் ஆடம்பரச் செலவு செய்ய வகையற்ற வறிஞர்கள் தாழ்ந்தவர்களாம். வியாபாரம் செய்து பொருளீட்ட வசதி இன்றி, பிறரிடம் குற்றேவல் புரிந்து சொற்ப சம்பளம் வாங்கிக் கஷ்ட ஜீவனம் செய்பவர்கள் தாழ்ந்தவர்களாம்.

கையில் காசில்லாமல், கஷ்டங்களை சகியாமல், மனைவி மக்களின் பசிப்பிணியைப் போக்க வேண்டுமே என்ற ஏக்கத்தில், பிறரிடம்

போய் பண உதவி—அல்லது கடன் உதவி கேட்பவர்கள் தாழ்ந்தவர்களாம்! உள்ளூரில் வயிற்றுப் பிழைப்புக்கு ஒரு வழியும் இல்லாமற் போனதால், ஊரை விட்டு வெளியேறி, 'முஸாபிர்' கோலம் பூண்டு ஊர் ஊராய் சுற்றியலைந்து பிழைப்பவர்கள் தாழ்ந்தவர்களாம். மிக ஓதிப் படித்திருந்தும், ஆலிமாய் இருந்தும், ஒரு தொழிலும் ஒரு வாணிபமும் செய்யத் தெரியாமல் பள்ளிவாசலிலோ, மத்ரஸாவிலோ இருந்து, இஸ்லாமிய மக்களுக்காக இமாமத்து வேலையோ உஸ்தாது வேலையோ செய்து, சொற்ப சம்பளம் பெற்று கஷ்ட ஜீவனம் செய்பவர்கள் தாழ்ந்தவர்களாம்!

அந்த அப்பாவிகளான ஆலிம் உலமாக்களையும் உஸ்தாதுமார்களையும் போய் கேட்டுப் பாருங்கள்; யார் உயர்ந்தோர்?யார் தாழ்ந்தோர் என்பதை ஸ்பஷ்டமாக, திருக்குர்ஆன் ஆதாரத்தோடு எடுத்துரைப்பார்கள்.

"இன்ன அக்ரமக்கும் இன்தல்லாஹி அத்காக்கும்—"

"நிச்சயமாய் உங்களில் உயர்ந்தோர் சிறந்தோர் யார் என்றால், யார் அல்லாஹ்வுக்குப் பயந்து பக்தி ஒழுக்கத்தால் சிறந்திருக்கிறாரோ அவரே உங்களில் சிறந்தவர், உயர்ந்தவர் ஆவார்" என்னும் திருவாக்கியத்தை, திருமறையிலிருந்து எடுத்தோதுவார்கள்.

* * * *

தங்கமும் வெள்ளியும் செல்வம் தான். அறிவும் ஞானமும் செல்வம் தான். பொருட் செல்வத்துக்கு அழிவு உண்டு; அருட் செல்வமாகிய அறிவுக்கு அழிவு இல்லை. பணக்காரர்கள் இன்று உக்கத அந்தஸ்தில், உப்பரிகைகளில், திண்டுத் தலையணையிலே வாழலாம்; நாளை அவர்களுக்கு என்ன நேரிடுமென்று யார் கண்டது? அது அல்லாஹு தஆலா ஒருவனுக்கே தெரியும். ஒரு பூகம்பம் ஏற்பட்டு பூமி அசைந்து அந்தப் பெரும் மாளிகையே இடிந்து விழுந்து விடலாம். அல்லது சூறாவளிக் காற்றடித்துப் புயலினால் தோட்டமும் துரவும் பயிரும் யாவும் அழிந்து போகலாம். பெரு மழை பெய்து பெரு வெள்ளம் வந்து ஊரே பாழ்ப்பட்டுப் போகலாம்; அல்லது கொடுமையான தொத்து நோய் வந்து பல்லோர் செத்துப் போகலாம்.

இப்படிப்பட்ட பலாய்—முஸீபத்து வரும் போது, அரண்மனையில் மேல் அந்தஸ்துள்ளவன்—குடிசையில் வாழும் கீழ்

அந்தஸ்து உள்ளவன் என்று பாகுபடுத்திப் பார்க்கிறதா அது? மலக்குல் மவுத்து என்னும் மரணத்தூதர், பணக்காரன் வீட்டுக் காவலாளிக்கும் வெறி நாய்க்கும் பயந்து உள்ளே போகாமல் வெளியே நின்று விடுகின்றாரோ? மரணகாலம் வந்தால், அவன் பணக்காரனோ, ஏழையோ, தாழ்ந்தவனோ, உயர்ந்தவனோ, கோடீஸ்வரனோ, பிச்சைக்காரனோ என்று பாகுபாடு செய்யாமல், அவர் அல்லாஹு தஆலாவுடைய கட்டளைப் பிரகாரம் அந்தக்ஷணமே உயிரைப் பறித்துப் போய் விடுகிறார்.

இவ்வாறே, செல்வமும் நிலை குலைந்து போய் விடும். இன்று யானை மீது ஊர்ந்து செல்லும் மன்னன், நாளை கால் நடையாக நடந்து செல்லலாம். இன்று ஆகாய விமானத்தில் பறப்போர், நாளை ரயில் டிக்கட்டுக்கும் காசில்லாமல் கஷ்டப்படலாம். இன்று மோட்டாரில் செல்பவர் நாளை பஸ்ஸில் போக ஓரணா இன்றி பாதையில் நடந்து போகலாம்.

எனவே, இப்பாருலகில் உயர்ந்தோர் யார்? தாழ்ந்தோர் யார்? என்பதை நீங்களே சிந்தித்துப் பாருங்கள். "இட்டார் பெரியோர், இடாதார் இழிகுலத்தோர்" என்ற நல்வழியையும் எண்ணிப் பாருங்கள். உயர்வு—தாழ்வு பணத்தால் உண்டாவதில்லை; குணத்தாலும் ஒழுக்கத்தாலும் உண்டாவதேயாகும். தக்வா (பக்தி) உடையவரே உயர்ந்தோர்; ஒழுக்கமும் நற்குணமும் இல்லாதவர் தாழ்ந்தவரே!

(69-வது பகுதி)

திருக் குர்ஆன் : : : :
: : : : சார சங்கிரஹம்

பல விஷயங்கள் பற்றிய பல ஆயத்துகள்.

(ரஷ்மத் பாகவி)

நிராகரிப்போரை நேச ராக்காதீர்கள்.

நம்பிக்கை கொண்ட (முஸ்லிமான) வர்களே! உங்கள் சன்மார்க்கத்தைப் பரிகாசம் செய்கின்ற (அன்னிய) வேதக்காரர்களையும், (அல்லாஹ்வின் ஏகத்துவத்தை) நிராகரிக்கும் பேர் வழிகளையும் (காபிர்களையும்) உங்கள் நண்பர்களாக்கிக் கொள்ளாதீர்கள். நீங்கள் உண்மையான முஸ்லிம்களா யிருப்பின், அல்லாஹ்வுக்கு மட்டும் பயந்து நடந்து கொள்ளுங்கள். (வேதக்காரர்களும் காபிர்களுமான) அந்தப் பேர் வழிகள், நீங்கள் பாங்கு சொல்லி ஜனங்களைத் தொழுகைக்காக அழைத்தால், இதையும் அவர்கள் பரிகாசம் செய்கிறார்கள், உண்மையில் இவர்கள், விவேகம் கெட்டவர்களாய் (நல்லறிவற்றவர்களாய்) இருக்கிறார்கள். (எனவே இவர்களை நீங்கள் பொருட்படுத்த வேண்டாம்.)

(ஜுஸூ: லாயுஹிப்புல்லா; ஸூரா: அல்மாயிதா; ருகூ: 9)

தீயோரை எதிர்த்துப் போராடுங்கள்.

(உங்களுக்குத் தீங்கு செய்யும்) அந்த எதிரிகளை நோக்கி, 'இனி இப்படிச் செய்யாதீர்கள்' என்று (முதலில்) எச்சரிக்கை செய்வீர்களாக. அதன்படி அவர்கள், தவிழ்ந்து (பணிந்து) நடந்தார்களானால், அவர்களின் பழைய பாதகங்களை (குற்றங்களை) மன்னித்து விடுங்கள். அங்ஙனமின்றி, (மீண்டும் தீங்குச் செய்ய முற்படுவார்களாயின்) உங்களோடு போரிடுவதற்கு ஆயத்தமாய் விடுவார்களாயின், (நீங்களும் எதிர்த்துப் போரிடுங்கள்) அவர்களின் கதி, பழங்காலப் (பொல்லாப்) பேர் வழிகளின் அதோ கதியைப் போல் முடியட்டும். (முஸ்லிமானவர்களே), ஈமான் கொண்டவர்களே, நீங்கள், அத்தகைய (தீயவர்களான) காபிர்களை எதிர்த்துப் போரிட்டுக் கொண்டே இருங்கள்; அவர்களை (கொன்று) அடக்கிக் கொண்டிருங்கள். அவர்கள் மீண்டும் விஷமத்தனம் செய்யாத வரைக்கும், இன்னும் அல்லாஹ் உடைய சன்மார்க்கம் (இஸ்லாம்) இத்தரணியில் பரவி வியாபிக்கும் வரைக்கும் இப்படி (மதச்சேவை) செய்து கொண்டிருங்கள். (எல்லாம் வல்ல) இறைவன், (தீயவர்களான) அவர்களுடைய (தீச்) செயல்களைப் பார்த்துக் கொண்டு

தானிருக்கின்ருன். மேற் கொண்டும் அவர்கள் உங்களுக்கு விரோதமாய் சூழ்ச்சிகள் செய்து கொண்டிருந்தால், அல்லாஹு தஆலா உங்களுக்கு சாதகமாய் நல்லுதவி புரிவான் என்பதை நம்புங்கள். நிச்சயமாய் அல்லாஹு தஆலா நல்லோர்களுக்கு நல்லாதரவு புரிகிற வனுகவே இருக்கின்ருன்.

(ஜுஸு: காலல் மலவு; ஸூரா: அன்பால்; ருகூ: 4)

காபிர்களுக்கு மரணக் கஷ்டம் அதிகமாகும்.

நபியே, நீவிர் அந்தக் காபிர்களுடைய முடிவு காலத்தை (அவர்களின் கஷ்ட காலத்தை) காணத்தான் போகிறீர். (மரணத் தூதரான) மலக்குகள் வந்து, அந்தக் காபிர்களுடைய உயிரை (கடுமையாக) வாங்குவார்கள். அப்போது அவர்களுடைய முகத்தின் மீதும் கழுத்துப் பிடரியின் மீதும் (நெருப்புக் குண்டத்தினுல்) அடிப்பார்கள்; மேலும் "ஏ காபிர்களே, இப்போது நரகத்தின் வேதனையை நன்கு அனுபவியுங்கள். இது உங்கள் தீய காரியங்களுக்குரிய தண்டனை யாகும்; அங்ஙனமின்றேல், அல்லாஹு (தஆலா) தன்னுடைய எந்த அடியார்கள் மீதும், அநீதி (கடப்பான தண்டனை) செய்வதே இல்லை" என்று (கடுமொழி) கூறுவார்கள். அத்துடன், "ஏ காபிர்களே, உங்களுடைய முடிவு காலமும், அந்த(க் கொடியோர்களான) பிர்அவ்ன் கூட்டத்தாருடையவும், அதற்கு முன்னைய கூட்டத்தாருடையவும் முடிவுகாலம் (கதியைப்) போல் தானுகும். யார் யார், அல்லாஹ்வுடைய அத்தாக்ஷிகளை (பொய்யென்று) நிராகரிக்கின்ருர்களோ, அவர்களின் கதியும் (இவ்வாறே ஆகும்.) எனவே, அல்லாஹு தஆலா, அந்த ஜனங்களின் பாபகாரியங்களுக்காக அவர்களை (தண்டனையினுல்) பற்றிப் பிடித்துக் கொண்டான். நிச்சயமாக அல்லாஹு தஆலா மிகைத்தவனுகவே இருக்கின்ருன். அவனுடைய தண்டனையும் மிகக் கடுமையானதே யாகும்.

(ஜுஸு: வஃலமு; ஸூரா: அன்பால்; ருகூ: (6

காபிர்களுக்கு நரகமே கதி.

ஏ நபியே, (முஸ்லிம்களே) நீங்கள், (உங்களை எதிர்க்கும்) அந்த (நயவஞ்சகர்களான) முனபிகுகளையும், (விரோதிகளான) காபிர்களையும் எதிர்த்துப் போரிடுங்கள்; (ஜிஹாது செய்து உங்களை நீங்களே தற்காத்துக் கொள்ளுங்கள்.) அவர்கள் விஷயத்தில் கடுமையாகவே நடந்து கொள்ளுங்கள். மனம் தளர்ந்து போகாதீர்கள். கடைசியாக காபிர்களுடைய முடிவு காலம் (ஒதுங்குமிடம்) நரகமே யாகும்.

(ஜுஸு: வஃலமு; ஸூரா; தவ்பா; ருகூ: 10)

எவர்களை எதிர்த்துப் போரிட வேண்டும்?

(நிரபராதிகளான) முஸ்லிம்களுடன் எந்தக் காபிர்கள் (சூழ்ச்சி செய்து) போரிடுகிறார்களோ, அப்படிப்பட்டவர்களை எதிர்த்து (பதிலுக்குப் பதிலாகவும் தற்காப்பாகவும்) போரிடுவது முஸ்லிம்களுக்கு அனுமதிக்கப்பட்ட மதக் கடமையே யாகும். எளிய முஸ்லிம்கள் மீது கொடுமை இழைக்கப் படுவதால், அல்லாஹு தஆலாவும் (முஸ்லிம்களான) அவர்களுக்கே நல்லுதவி புரிகிறவனாக இருக்கின்றான். (பண்டைக் காலத்தில், முஸ்லிம்களான) இவர்கள், எங்கள் இறைவன் ஒரே ஆண்டவன், (அல்லாஹ் தான்)" என்று சொன்னதற்காக, (குறைஷ் காபிர்களால்) வீட்டை விட்டும் (ஊரை விட்டும்) துரத்தப் பட்டார்கள். (அக்காலத்தில்) அல்லாஹு (தஆலா, நல்லவர்களான) அவர்களுக்கு, மற்றவர்களைக் கொண்டு பரஸ்பரம் உதவி செய்யா திருந்தால், (பொதுவாக கிறிஸ்துவர்களுடைய) தேவாலயங்களும்; (யூதர்களுடைய) வணக்க ஸ்தலங்களும், (முஸ்லிம்களுடைய) மஸ்ஜிதுகளும் (பல வகையில்) இடித்துத் தகர்க்கப்பட்டுப் போயிருக்கும்; (இவை எப்படிப்பட்ட புனித ஸ்தலங்கள் என்றால்) இங்கு தான் அல்லாஹ்வின் பெயரை ஜனங்கள் அதிகம் தியானித்து வணங்குவர். எனவே, (நற்சேவையால்) யார் அல்லாஹ்வுக்கு உதவி செய்கின்றார்களோ, அவர்களுக்கு அல்லாஹு தஆலாவும் பேருதவி செய்கின்றான். நிச்சயமாக அல்லாஹு தஆலா, (பகைவர் அனைவரையும்) மிகைத்தவனாகவும், மகா சக்தியுடையவனாகவும் இருக்கின்றான்.

(ஜுஸு: இக்தரப; ஸூரா; ஹஜ்; ருகூ: 6)

பாபிகளின் கால்—கரங்களே சாக்ஷியம் சொல்லும்.

அந்த கியாமத்து (நியாயத் தீர்ப்பு) நாளின் போது, (தூண்டிக் கப்பட்ட) காபிர்கள் (பாபிகள்) நரகத்தின் பக்கம் விரட்டிக் கொண்டு போகப்படுவார்கள். அப்போது அவர்களை, பகுதிப் பகுதியாகப் பிரித்து ஒன்று சேர்க்கப்படும். எல்லோரும் நரகத்தின் வாயலண்டை சேகரிக்கப் படுவார்கள். காபிர்களுக்கு (நியாயம் வழங்கப்படும்). அப்போது, அவர்களுடைய காதுகளும் அவர்களுடைய கண்களும், அவர்களுடைய சருமத்தோல்களும் (சகல அவயவங்களும்,) தாம் தாம் செய்த பாப காரியங்களை எடுத்துக் கூறி அவர்களுக்குப் பாதகமாகவே சாக்ஷியம் கூறும். அப்போது, பாபிகளான காபிர்கள், தங்கள் அவயவங்களும் உடல் தோல்களுமான அவைகளை நோக்கி, (வியப்புடன்) "நீங்கள், எங்கள் உடலின் உருப்புக்களாய் இருந்தும் எங்களுக்கு விரோதமாக சாக்ஷியம் கூறினீர்களே ஏன்?" என்று (கேள்வி) கேட்பார்கள். அதற்கு

அவைகள், "எங்களுக்கு அல்லாஹ் (தஆலா, உண்மை பேசுவதற்கு வாய் அளித்து) சக்தி தந்தான்; இந்த அல்லாஹ் (தஆலா தான்) உங்களைப் போன்ற சகல ஜீவன்களுக்குப் பேசும்சக்தியை அளித்தவன். உங்களை முதன் முறையாக (உலகில்) அவனே உற்பத்திச் செய்தான். இப்போது இறுதியில் அவனிடமே திரும்பி வந்து சேர்ந்திருக்கிறீர்கள். உலக வாழ்வில் நீங்கள் அவ்விறைவனுடைய கட்டளையை மதிக்காமல் கிடந்துழன்றீர்கள்; உங்களுக்குப் பாதகமாகவே, உங்கள் காதுகளும், கண்களும், உங்கள் சருமங்களும் (பாதகமாக) சாக்ஷியம் கூறும் என்பதை நம்பாதவர்களாய் இருந்தீர்கள்; உங்கள் ரகசியச் செயல் அல்லாஹ்வுக்குத் தெரியாதென்று எண்ணியிருந்தீர்கள். இந்த அறிவீனமே உங்களை நரகத்தில் போட்டு விட்டன. எனவே உங்கள் ஒதுங்குமிடம் நரகம் தான். இனி உங்கள் தவ்பாவும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

(ஜுஸு: பமன்அல்லம; ஸூரா; ஹாமீம்; ருகூ: 3)

தப்ஸீருல் ஹமீத் பீ தப்ஸீரில் குர்ஆனில் மஜீத்.

7-வது (கடைசி) பாகம்

வெளிவந்து விட்டது.

இதில் 26-வது ஜுஸுவில் 50-வது ஸூரா முதல், 30-வது ஜுஸுவில் கடைசி 114-வது ஸூரு முடிய 65 ஸூருக்களின் தப்ஸீர் அடங்கியது. 1204 பக்கங்கள் கொண்டது. கிளேஸ் காகிதம் கலிகோ பைண்டு விலை ரூ. 16

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்.
கெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

பதருன்னிஸா

கற்பனை காவியம்

(ஏ. ஆர். கமால்)

6

இன்னல்கள் பல தரும் இப்னஸியாத்!

உனக்கு அரசனும் அஹ்லபைத்துக்கு எதிரியுமான எஸீதை ஒழித்துக் கட்டவே நான் 'ஷாம்' தேசம் வந்து இருந்தேன். ஆனால் நான், நினைத்தபடி சந்தர்ப்பம் ஏற்படாததால் அவனைக் கொல்ல என்னால் முடியவில்லை—ஆனால் அஹ்லபைத்துக்கு அவனைவிட பன் மடங்கு அதிக பகைவனான உன்னைக் கொல்ல, சமயம், சந்தர்ப்பம், சூழ் நிலை யாவும் ஒருங்கே அமைந்து இருக்கிறது. என்றாலும் நான் உன்னைக் கொல்லாமலே போகிறேன். இதற்குக் காரணம் ஒரு முறை நீ என் உயிரைக் காப்பாற்றி இருக்கிறாய்! அந்த நன்றியை முன்னிட்டுதான் இப்போது உன்னை உயிருடன் விட்டுச் செல்லுகிறேன்.

இது நிற்க! கடந்த சில வாரங்களாக என் ஆசை பேச்சில் மயங்கி விட்ட நீ, நான் உன்னை முழு மனதோடு காதலிப்பதாகக் கனவு கண்டு வருகிறாய். இவை எல்லாம் வெறும் வேஷம் என்பதை நீ உணரவில்லை. இப்னஸியாத்! கொஞ்சம் அமைதியாக இருந்து ஆராய்ந்து பார்! எந்த அஹ்லபைத்தை அழிக்க நீ திட்டமிட்டு அதன் எதிரியாக இருக்கிறாயோ, அதே அஹ்லபைத்தில் பிறந்த நான், அதுவும் உன்னையும் எஸிதையும் கொல்ல வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டுள்ள கன்னி உன்னைக் காதலிக்கவோ கல்யாணம் செய்து கொள்ளவோ முடியுமா?

நான் உன்னை காதலிப்பதாக நடித்ததும் கல்யாண வாக்குறுதி அளித்ததும் உண்மை என ஒப்புக் கொள்ளுகிறேன். மறுக்கவில்லை. நான் உன்னுடன் அவ்விதமாக நடித்து சாகஸ வேலைகள் செய்யாமல் இருந்தால் நீ என்னை இவ்வளவு அமைதியோடு பூர்ண சுதந்திரம் தந்து வைத்திருப்பாயா? அல்லது என் உயிருக்கும் மேலாக பேணி கண்ணும் கருத்துமாகக் காத்து வரும் கற்பை தான் களங்கம் படுத்தாமல் இருந்திருப்பாயா?

இறுதியாக, நான் உன் கையில் இருந்து விடுதலை பெற சந்தர்ப்பத்தை எதிர் பார்த்திருந்தேன். அந்தச் சந்தர்ப்பம் இப்போது எனக்குப் பூர்ணமாக கிடைத்து விட்டது. நான் போகிறேன்.

'எங்கே போகிறேன்? என்ன செய்வேன்?' என்பது எனக்கே இப்போது தெரியாமல் இருக்கிறது. எனவே, எக்காரணத்தைக் கொண்டும் நீ என்னைத் தேடிப் பிடிக்க முயற்சிக்க வேண்டாம். அப்படி மீறி முயற்சித்தால் அதில் நீ ஏமாற்றத்தையே காண்பாய். அது மட்டுமல்ல, நீ என்னை அடைவதற்காக செய்த சூழ்ச்சிகளையும் நம்பிக்கை துரோகத்தனத்தையும் எஸீத் காதுகளுக்கு எட்டும்படி செய்து விடுவேன்- அதன் பின் உன்கதி என்ன ஆகும் என்பதை நீயே நன்கு அறிவாய்! ஆகவே, நான் மரணமாகி விட்டதாக எண்ணி என்னை இக்கணமே நீ மறந்து விடுவது நலம்.

இப்படிக்கு
உன் எதிரி
"பதருன்னிஸா"

நிருபத்தை தீட்டிவிட்ட பதருன்னிஸா அதை இப்னஸியாத் கண்ணில் படக்கூடிய இடத்தில் வைத்து விட்டு பயங்கர இருள் கவ்விய அந்கோரத்தில், கடலில் விழுந்த சிறு துளி போல் அந்த இரவில் மறைந்து விட்டாள்.

மறு நாள் காலை மீண்டும் பிரயாணத்தை தொடரும் போது பதருன்னிஸாவைக் காணுமல் அவளுடைய கடிதத்தைக் கண்ட இப்னஸியாத் உள்ளம் பதறினன். 'பதருன்னிஸா' நம்பிக்கை துரோகத்தின் மறு பெயரா?" அவனையும் அறியாமல் அவன் வாய் முணுமுணுத்தது. 'இவ்வளவு சீக்கிரம் அவளுடைய சாகஸ பேச்சில் மயங்காமல் அவளை தக்க பாதுகாப்போடு வைத்திருக்க வேண்டும். அவளுக்கு பூர்ண சுதந்திரம் கொடுத்து வைத்தது முட்டாள்தனம்' என உணர்ந்து தன்னையே நொந்து கொண்டான் இப்னஸியாத்—அவன் வாழ்நாளிலேயே இது மகத்தான முதற்தடவையான பெரிய ஏமாற்றம், பெரிய தோல்வி, அதுவும் கேவலம் ஒரு பெண்ணால்! இதை நினைக்கும் போது அவன் நாடி நரம்புகள் எல்லாம் துடிக்க ஆரம்பித்தன. மீசை படபடக்க கண்கள் இரண்டும் கோவை பழம் போல் சிவந்து விட்டன.

ஆகவே, பதருன்னிஸா, 'தன்னைத் தேட முயற்சிக்க வேண்டாம்' என்று கடிதத்தில் எச்சரித்து இருந்தும் அதை பொருட்படுத்தாமல் "இரவு காலத்தில் அதுவும் அந்த பயங்கர இருளில் அவள் எங்கேயும் போய் இருக்க மாட்டாள். இங்குதான் அண்மையில் இருந்து இப்போது புறப்பட்டுக் கொண்டிருப்பாள். போய் தேடிக் கண்டு பிடித்து கட்டி இழுத்து வாருங்கள்." என்று நான்கு பக்கமும் ஆட்களை அனுப்பி தேடச் செய்தான் இப்னஸியாத்.

அவன் நினைத்தபடியே அந்த இருளில் பதருன்னிஸா தூர எங்கேயும் போய்விட வில்லை. பக்கத்திலுள்ள ஒரு குக்கிராமத்தில் இரவு பொழுதை கழித்து விட்டு காலையில் தான் அவள் தன் பிரயாணத்தை தொடக்கி இருந்தாள். எனவே பதருன்னிஸா செல்லும் திசையில் வந்த நான்கு வீரர்கள் அவளைப் பிடித்துக் கொண்டார்கள். இப்படி நேரும் என்று தெரிந்தோ அல்லது தன் கற்பை களவாட வரும் கயவனைக் கொல்லவோ, இப்னஸியாதின் கூடாரத்தில் இருந்து வரும்போது ஒரு வாளும் எடுத்துக் கொண்டு வந்திருந்தாள். அந்த வாளைக் கொண்டே தன்னைப் பிடிக்க சூழ்ந்திருக்கும் நான்கு வீரர்களையும் தாக்க ஆரம்பித்தாள். ஒரு பெண்ணின் வாளுக்கு நான்கு வீரர்களும் தத்தம் வாட்களுடன் பதில் சொல்லிக் கொண்டிருந்தார்கள். பதருன்னிஸா படை தளபதிபோல் வாளை வீசிக்கொண்டிருந்தாள். என்றாலும் சற்று நேரத்திற்குப் பின் அவள் களைப்படைந்து கீழே விழும் தருணம், எதிர் பாராமல், குதிரை மீது வந்த ஒரு முகமூடி வீரன் ஒரு கையால் பதருன்னிஸாவைத் தூக்கிக் கொண்டு மறுகையில் இருந்த வாளால் நான்கு வீரர்களும் கோழைகள் என்று உணர்ந்து ஓடும் வரை போர் புரிந்தான்.

முகமூடி வீரன் ஒருவனை எதிர்த்து போர்புரிய முடியாமல் தோல்வியுற்று உயிருக்கு அஞ்சி ஓடி வந்து விட்ட அந்நான்கு வீரர்களும், "ஒருவனை எதிர்த்து போராட நான்கு வீரர்களால் முடிய வில்லை என்றால் அவ்விதமான கோழைகள் இருப்பதைவிட இறப்பதே மேல்' என்று நம்மை அந்த இப்னஸியாத் கொன்று விட்டாலும் விடுவான். ஆகவே, பதருன்னிஸா அகப்பட்டதும் நாம் போர்புரிந்து தோல்வியுற்றதும், எதுவும் இப்னஸியாத் இடம் சொல்லக் கூடாது. பதருன்னிஸா அகப்பட வில்லை என்றே சொல்லி விட வேண்டும்" என்று நான்கு பேரும் முடிவு செய்து அப்படியே இப்னஸியாதிடமும் கூறிவிட்டார்கள். மற்ற மூன்று பக்கம் சென்ற வீரர்களும் "பதருன்னிஸா அகப்படவில்லை" என்ற செய்தியைத் தான் கொண்டு வந்தார்கள். இப்னஸியாத் மேலும் எதுவும் நடவடிக்கை எடுக்காமல்–இல்லை–எடுக்க முடியாமல் ஒன்றுமே நிகழாதது போல் தன் கூபா பிரயாணத்தை மீண்டும் தொடக்கினான்.

"தக்க சமயத்தில் வந்து காப்பாற்றினீர்கள். இந்த உதவியை நான் ஆயுள் முழுதும் மறக்க மாட்டேன். தாங்கள் யார் என்பதை நான் அறியலாமோ?" தன்னைக் காப்பாற்றிய முகமூடி வீரனிடம் பதருன்னிஸா கேட்டாள்.

"நான் யார் என்பதை சொல்வதை விட நீ என்னைப் பார்த்தே தெரிந்து கொள்ளலாம்!" சொல்லியபடி தன் முகத்தில் இருந்த

திரையை அகற்றினுன் அவ்வீரன். அவன் முகத்தைப் பார்த்ததும் பதருன்னிஸா தன் கண்களையே நம்ப மறுத்தாள். இது கனவா நினைவா என்ற ஆராய்ச்சியில் பேசா மடைந்தையாக வாயடைத்துப் போனுள். மனதில் விருந்த பரவசப்பாறையின் கனத்தைத் தாங்க முடியாமல் பதருன்னிஸா அவ்வீரனின் பரந்த மார்பில் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டு ஆனந்த கண்ணீர் வடித்தாள்.

ஆம்! அவள் கருத்தைக் கொள்ளைக் கொண்ட, எஸீதிடம் கைதியாகி விட்டிருந்த யூஸுப்தான் முகமூடி அணிந்திருந்தவன்.

"பதருன்னிஸா! எதற்காக இந்தக் கண்ணீர்? கண் காணுமல் போன காதலனைக் கண்டு விட்டோம் என்ற குதூகலத்தால் வடிக்கும் கண்ணீரா! அல்லது கடமை, கடமை என்று வீணே காலத்தைக் கழிக்கும் கயவனைக் காதலித்தோமே என்ற கவலையால் வடிக்கும் கண்ணீரா?" பதன்னிஸாவின் பட்டுப் போன்ற கன்னங் களை வருடியபடி கேட்டான் யூஸுப்.

"முதலில் சொன்னீர்களே! அந்த ஆனந்தத்தில் வடியும் கண்ணீர் தானிது! அது இருக்கட்டம். தாங்கள் கைதியாகி விட்ட தாக மஸ்வூத் சொன்னுரே அது உண்மையா? உண்மையானுல் சிறையில் இருந்து எப்படி வெளியே வந்தீர்?? நான் ஆபத்தில் சிக்கி இருக்கிறேன் என்று ஜோஸ்யம் ஏதாகிலும் பார்த்து இங்கு வந்தீரா???" பதருன்னிஸா ஒரே மூச்சில் மூன்று கேள்விகளைக் கேட்டாள்.

"எஸீதின் வீரர்கள் என்னைக் கைது செய்தது உண்மை. எஸீ தின் ஆணைப்படி நான் பாதாள சிறையில் அடைக்கப் பட்டேன். அன்று மத்தியானம் வந்த சாப்பாட்டை பசி அதிகமாக இருந்த படியால் சாப்பிட்டு விட்டேன். ஆனுல் அன்று இரவு வந்த சாப் பாட்டை உடனே சாப்பிடாமல் பின்பு சாப்பிட்டுக் கொள்ளலாம் என்ற எண்ணத்தில், இங்கு இருந்து எப்படி வெளியேறுவது என்ற சிந்தனையில் ஆழ்ந்திருந்தேன். அதோடு நான் வராததைக் கண்டு நீ சாப்பிட்டாயோ இல்லையோ என்ற கவலையும் மேலிட்டது. அப்போது எங்கிருந்தோ இரண்டு பல்லிகள் சண்டை போட்டுக் கொண்டு எனக்கு வந்திருந்த சாப்பாட்டில் வந்து விழுந்தன. ஆகவே, அந்தச் சாப்பாட்டை எடுத்து ஒரு மூலையில் கொட்டி விட்டு வெறும் தண்ணீர் மட்டும் பருகி விட்டு படுத்துக் கொண் டேன். உன்னுடைய நினைவு எனக்கு தூக்கம் வராமல் தடுத்துக் கொண்டிருந்தது. சுமார் பனிரண்டு மணிக்கு சிறை கதவு திறக் கப்படும் ஒலி கேட்டது. 'இந்நேரத்தில் இங்கு யாரும் வர வேண்டிய காரண மென்ன?' என்று தனக்குத்தானே கேட்டுக் கொண்டு அதை பக்குவமாக அறிய துயில் கொள்ளும் பாவனையை மேற் கொண்டேன். "முதலில் சாதம் சாப்பிட்டானு பார்!" என

எஸீதின் குரல் கேட்டது. "சாப்பிட்டு விட்டார் அரசே!" என்று பதில் குரல் ஒன்று எழுந்தது. "மெதுவாக அவனை ஆட்டிப்பார்" என்று மீண்டும் எஸீத் கூறினான். இதில் ஏதோ மர்மம் இருக்கிறது என்று யூகித்துக் கொண்ட நான், ஒருவன் வந்து என்னை ஆட்டும்போது நான் மூச்சு விடாமல் இருந்தேன். என்னை ஆட்டியும் உருட்டியும் என் மூக்கில் கையும் வைத்து பார்த்த அவன் "செத்து விட்டார் அரசே! கொஞ்சங்கூட உசும்பவுமில்லை மூச்சு விடவுமில்லை." என்று முடிவாகக் கூறினான். "ஒழிந்தானா என் உயிருக்கு எமனான விரோதி!" என்று கூறி சற்று நேரத்திற்குப் பின் மீண்டும் "சரி! அதற்கு நீயே ஏற்பாடு செய்" என்று கட்டளையிட்டான் எஸீத்.

"தங்கள் கட்டளைபடி காலையில் கழுவி குளிப்பாட்டி அடக்கம் செய்கிறேன் அரசே!" பதில் குரல் எழுந்தது.

"காலையில் செய்யக் கூடிய காரியமாடா அது?"

"அப்படியானால் இப்போதே அடக்கம் செய்து விடட்டுமா?"

"நீ அடக்கவும் வேண்டாம். மடக்கவும் வேண்டாம். பேசாமல் தூக்கிக் கொண்டு போய் 'ஜீல்' நதியில் போட்டு விடு. காலையில் எங்கேயாகிலும் கரையில் ஒதுக்கப்பட்டிருக்கும். காண்பவர்கள் 'நதியில் தவறி விழுந்தோ அல்லது தற்கொலையோ செய்து கொண்டான்' என யூகித்து அவர்களே அடக்கம் செய்து விடுவார்கள்" என்று எஸீத் சொன்னதும், ஒருவன் என்னை தன் தோள்மீது தூக்கிக் கொண்டு குகை போன்ற ஒரு திருட்டு வழியாகக் கொண்டு வந்து ஜீல் நதியில் போட்டு விட்டான். அங்கிருந்து நான் நீந்திக் கொண்டே கரையை வந்தடைந்தேன். என்னை யாரும் கண்டும் பிடிக்கக் கூடாதென்பதற்காக அப்போதில் இருந்து இந்த முகமூடியை அணியத் தொடங்கினேன். கரையை அடைந்த நான் முதல் வேலையாக உன்னைப் பார்க்கவே ஓடிச் சென்றேன். ஆனால் அங்கு நீயுமில்லை. உன் அப்பாவுமில்லை. அக்கம் பக்கத்தில் வீடுகள் ஜனங்கள் இருந்தாலும் விசாரிக்கலாம். அதுவு மில்லை. என்ன செய்வது? என்னைத் தேடித்தான் நீ வெளியேறி இருப்பாய் என்று யூகித்து நான் உன்னைத் தேட ஆரம்பித்தேன். அப்படி தேடிக் கொண்டு வரும் போது தான் நீ நான்கு வீரர்களுடன் போர் புரிவதைப் பார்த்து பூரித்தவனாக மறைவில் நின்று ரசித்துக் கொண்டிருந்தேன். நீ களைப்படைந்து தோல்வி யுறும் சமயம் நான் உன்னைக் தாங்கியபடி உன் இடத்தில் நான் நின்று போர்புரிய தொடங்கினேன்.

"பெண்ணாய் பிறந்த நீ இவ்வளவு தைரியத்தோடும் தீரத்தோடும் நான்கு வீரர்களின் வாட்களையும் பொருட்படுத்தாமல் போர்புரிந்தது பாராட்டத் தக்கதே! முன்பு என்னிடம் வாயளவில்

கூறிய தன் மனோதிடத்தை இன்று செயலளவில் செய்து காட்டி தனக்குள்ள வீரத்தையும் தீரத்தையும் நிரூபித்து விட்டாய்.” யூசுப் தன்மீது நிகழ்ந்த சம்பவங்களை சொல்லி விட்டு அவள் வீரத்தை பாராட்டி புகழ்ந்தான்.

“என்னைப் பற்றி புகழ்வது இருக்கட்டம்! தாங்கள் அந்த சாதத்தை சாப்பிட்டு இருந்தால்.........”

“செத்து இருப்பேன் என்கிறாயா? அதுதானில்லை.”

“என்ன இல்லை. பல்லி மட்டும் விழாமல் இருந்தால், சாதத்தில் விஷம் கலந்திருக்கும் விஷயம் தெரியாத நீங்கள் அதை சாப்பிட்டு இருக்க மாட்டீரா? விஷம் சாப்பிட்டால் சாக மாட்டார்களா?” பதருன்னிஸா வியப்போடு வினவினாள்.

“கட்டாயம் சாகக் கூடும்! ஆனால் யாரை உயிருடன் வைக்க வேண்டுமென்று ஆண்டவன் நாடி இருக்கிறானோ அவனை இவ்வுலக மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து அழிக்க முற்பட்டாலும் அழிக்க முடியாது. கொல்லுபவனை விட காப்பாற்றுபவனின் செயல் நூதனமானது. அது சரி! நீ வீட்டை விட்டு எங்கே போனாய்? இதுவரை எங்கே எப்படி இருந்தாய்?? அப்பா எங்கே இருக்கிறார்??? எல்லாம் விபரமாகச் சொல்” என்று யூசுப் கூறினான்.

“எவ்வளவு நேரம் இங்கேயே நின்று பேசுவது? அதோ எதிரில் தெரியும் மண்டபத்தில் போய் உட்கார்ந்து சாவகாசமாக பேசலாம் வாருங்கள்” என்று பதருன்னிஸா சொன்னதும் யூசுப் அதை ஆமோதித்தான். இருவரும் மண்டபத்தை அடைந்து குதிரையை ஒரு கம்பத்தில் கட்டி விட்டபின் ஓர் இடத்தில் உட்கார்ந்தார்கள். பதருன்னிஸா நடந்தவற்றை ஒன்று விடாமல் யூசுபுக்குச் சொன்னாள்.

“பதருன்னிஸா! இதுதான் தக்க தருணம்! தற்போது இப்னஸியாத் இல்லாததால் சுலபமாக எஸீதைத் தீர்த்து கட்டி விடலாம். ஆகவே, உன்னை மஸ்ஊத் வீட்டில் கொண்டு போய் விடுகிறேன். நீ அங்கு............” எல்லாவற்றையும் கேட்டபின் யூசுப் சொல்லிக் கொண்டு வரும்போது பதருன்ளிஸா அவன் பேச்சு முடிவு பெறுவதற்குள் குறுக்கிட்டு கூறினாள்.

“என் மனதை கவர்ந்த மன்னவா! தாங்கள் எஸீதைக் கொல்லுவதானால் எஸீத் மட்டுமின்றி ஒரு பாவமுமறியா பல பாமர மக்களும் அழிய நேரிடும். அதிலும் கூபா சென்றுள்ள இப்னஸியாத் நிரபராதியான குடிமக்களை எல்லாம் தூக்கில் ஏற்றி விடுவான். எஸீதை கொல்லும் தருணம் தாங்கள் இக்காட்டின் இளவரசர் என்று மக்களுக்கு தெரிந்து விட்டால் எஸீத் பக்கம் சிலபேரும்

தங்கள் பக்கம் சிலபேருமாக இரு கோஷ்டிகளாகி இரண்டும் ஒன்றோடு ஒன்று மோத நேரிடும். அப்படி மோதல் ஏற்பட்டு விட்டால் இதில் எத்தனை மக்கள் அநியாயமாக மடிவார்கள் என சொல்லத் தேவை இல்லை. நமக்கு பகைவர்கள் எஸீத், இப்னஸியாத் இருவர்தானே யன்றி நாட்டு மக்களுமில்லை, உயிருக்கு அஞ்சி எஸீதின் ஏவலுக்கு கட்டுப்பட்டு நமக்கு எதிராக வேலை செய்யும் சேவகர்களுமல்ல.

"மேலும் எஸீதும் இப்னஸியாதும் சூழ்ச்சியின் மறுபெயர்கள். ஆகவே, சூழ்ச்சிக் காரர்களை சூழ்ச்சியால் கொல்லுவதே நலம். நான் எதிர் பார்த்திருந்தேன் ஒரு சந்தர்ப்பத்தை. ஆனால் ஆண்டவன் அதைவிட சிறந்த சந்தர்ப்பம் ஒன்றை இப்போது எனக்கு அளித்து இருக்கிறான். இப்னஸியாத் என்னைக் காப்பாற்றி அவள் உயிருக்கு அவனே எமனாகி விட்டிருக்கிறான். ஆண்டவன் எனக்கு இப்போது அளித்துள்ள சந்தர்ப்பத்தை பயன் படுத்திக் கொண்டால் 'இன்ஷா அல்லா' இரண்டே நாளில் எஸீதும் இப்னஸியாதும் இவ்வுலகை விட்டே ஒழிந்து விடுவார்கள். நான் மேற் கொள்ள இருக்கும் நடிப்பின் சூழ்ச்சியால், எஸீத் இப்னஸியாத் இந்த இருவர்களைத் தவிர மூன்றாவதாக ஒரு ஈ கூட இறக்கக் காரணமில்லை, அவசியமுமில்லை.

"நான் எப்படி அவர்களை அவ்வளவு சுலபமாக அழிப்பேன்" என்று இப்போது ஒன்றும் கேட்காதீர்கள். என்னை இருக்க சொல்லும் அதே மஸ்வூத் வீட்டில் தாங்கள் மறைந்து இருங்கள். சமயம் ஏற்படும் போது நான் தங்களுக்கு ஆள் அனுப்புகிறேன். "கேவலம் பெண்ணால் என்ன செய்ய முடியும்?" என்று எண்ணாதீர்கள். நான் குறிப்பிட்ட இரண்டு நாட்களில் அவ்வேலையை என்னால் செய்து முடிக்கப்படவில்லை யானால் அதன்பின் அதைத் தாங்கள் மேற் கொள்ளுங்கள். தயவு செய்து இந்த ஒரே ஒரு முறை எனக்குச் சந்தர்ப்பம் அளியுங்கள்."

பதருன்னிஸா சொன்ன இவ்வளவையும் யூசுப் ஊக்கத்துடன் கேட்டான். அதன் பின் சற்று நேரம் சிந்தனையில் ஆழ்ந்திருந்தான். பதருன்னிஸா சொல்வதும் ஓர் அளவு நியாயம் என்று அவன் மனம் அறிவுரைத்தது. 'அவள் சொல்வது போல் உண்மையில் நாம் போய் இப்னஸியாதையும் எஸீதை கொல்ல வேண்டுமானால் அவர்களுடன் ஆட்களையும் கொல்ல நேரிடும். அதிலும் நான் இளவரசன் என தெரிந்து விட்டால் நாட்டில் குழப்பம், கலாட்டா எல்லாம் ஏற்பட்டு அதனால் உயிர் நஷ்டங்களோடு பொருட் சேதமும் அதிகமாக ஏற்படும். மேலும் பதருன்னிஸா

இரண்டு நாளின் தவணைதானே கேட்கிருள். கொடுத்துப் பார்க்கலாம். அந்த இரண்டு நாட்களில் அவள் எஸீதைக் கொல்லவில்லையானல் அதன்பின் நாம் யோசித்து காரியத்தில் இறங்கலாம்.' இவ்விதமான சிந்தனைக்குப் பின் அவள் இஷ்டப்படியே செய்யும்படி சொல்லி விட்டு அவளை ஷாம் தேசம் அழைத்துக் கொண்டு வந்தான் யூசுப்.

அன்று ஒரு நாள் இருவரும் மஸ்ஊத் வீட்டில் ஓய்வு எடுத்துக் கொண்டார்கள்.

'தனக்கே வெற்றி' என்ற தன் நம்பிக்கையோடு மறு நாள் பதருன்னிஸா எஸீதின் அரண்மனையை நோக்கி ராஜ நடை நடந்து கம்பீரமாகச் சென்ருள்.

(தொடரும்)

ஸப்அ ஸனுபில்

(ஹனபி மதுஹபுக்குரியது)

இந்த புஸ்தகத்தில் ஏழு புஸ்தகங்கள் அடங்கியிருக்கின்றன. அவைகள்: (1) ஜருருல் மூமினீன் (2) ஜருருல் முஸ்லிமீன் (3) ஜருருல் முஸல்லீன் (4) ஜருருஸ் ஸாயிமீன் (5) ஜருருல் முஜக்கீன் (6) ஜருருல் ஹாஜ்ஜீன் (7) ஜருருத் தாயீன்.

இத்துடன் அம்மயத் ஜுஸு, ஈடேற்ற மாலை இவைகளும் ஞான ரத்தின குறவஞ்சி, ஞான ஆனந்தக் களிப்பு, திருமெஞ்ஞான சரநூல், ஞான நடனம் இவைகளும் சேர்ந்திருக்கின்றன. இதன் விலை ரூ. 3-00

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.

நபி நாயகம்

படம்: கலியாணப்பரிசு. இசை: வாடிக்கை மறந்ததும் ஏனோ.

அ. அப்துல் வஹாப்.

நாயகம் பிறந்ததும் ஏனோ—அவர்
காட்டிய கொள்கையும் வீணோ—இந்த
நாட்டிலுள்ள வீணர்கட்கு நல்லறிவை யூட்டி
நல்லோராய் ஆக்கிட தானே. (நாயகம்)

1. கதிரொளியாம் நபி நாதர்—இந்த
காசினியிற் தோற்ற மேனோ—கெட்ட
மாந்தர்களின் மனதில் சேர்ந்திருக்கும் இருளை
மறைத்து ஒளிவிடத் தானோ (நாயகம்)

2. இல், வாழ்கையை இழக்கிட்ட கைம் பெண்
இங்கு ஏற்றிடும் தனிதுயர் கண்டு
மறுமுறை மணத்தல் மாசில வென்று
உறுதி மொழிந்தார் அன்று—இது
துயர்களைக் கிடும் வழி யொன்று—அவர்
இல்வாழ்வை ஏற்றிட நல்வாழ்வைக் கண்டிட
இவ் வுலகினில் தோன்றினார் அன்று (நாயகம்)

3. ஆணுக்கு அடிமை பெண்ணோ—இது
அறிவிலா செயல்களில் ஒன்றோ—இந்த
அறிவிலா செயலை அகற்றிட தானோ
அவனியில் தோன்றினார் பின்னோ (நாயகம்)

4. பெண் குழந்தைப் பிறந்தன்றே—அதை
மண்ணுக்குள் மறைத்தார்கள் நன்றே—இந்த
பெரும் பிழை நீக்கிட பிழைத்துயிர் வாழ்ந்திட
பிறந்திட்டார் புவி மீது அன்றே (நாயகம்)

5. அன்று, சீர்பல செய்ததினாலே
இன்று வாழ்கின்றோம் நாம் புவிமேலே
அன்றவர் தோன்றாவிடிலே
இன்று ஏது வாழ்வினிலே
நன்றி கூறி வணங்கிடுவாயே (நாயகம்)

6. நாயனின் துணைக் கொண்டு நபிகள்—இங்கு
காட்டினார் சீர்பல செயல்கள்—அந்த
நல்லுரையின் படியே புல்லறிவோன் வஹாப்
நடந்திட துணை புரிவீரே (நாயகம்)

தப்ஸீறுல் ஹமீத் பீ தப்ஸீரில் குர்ஆனில் மஜீத்

நமது நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருளப்பட்ட திருக் குர்ஆனே உலக மக்கள் அனைவருக்கும் பொது வேத மாகவும், இஸ்லாம் மார்க்கத்திற்கு ஆதாரமாகவும் இருந்து வருகிறது. முஸ்லிம்கள் இஸ்லாம் மதத்திற்கு ஆதாரமா யுள்ள திருக்குர்ஆனின் கட்டளைகளையும் அரிய போதனை களையும் தெரிந்து கொள்வது அவசியமாகும். இஃது திருக்குர் ஆனின் தப்ஸீரை தமிழ் பாஷையில் **ஸுன்னத்து வல் ஜமாஅத்தின்** உலமாக்களாலும் இமாம்களாலும் எழுதப் பட்ட தப்ஸீர்களை ஆதாரமாகக் கொண்டு, எழுதப்பட்டது.

இந்த தப்ஸீரில் குர்ஆன் ஆயத்துகளை அறபியில் அழ காக எழுதி போட்டோபிளாக் செய்யப்பட்டு தனித்தனியாக ஆங்காங்கு அமைத்தும் அதன் கீழ் சரியான தர்ஜுமாவும், தப்ஸீர் என்னும் விரிவுரையும், வியாக்யானமும், ஷஃனு நுஸூல் என்னும் ஒவ்வொரு ஆயத்தும் இறங்கிய காரணங் களும், அதற்கேற்ப ஹதீது, ரிவாயத்து, ஹிக்மத்து, பாயிதா, கிஸ்ஸா, அஜீபா முதலிய அரும் பெரும் ஆதாரங்களும் ஒருங்கே சேர்த்து அமைக்கப் பெற்றிருக்கின்றன.

முதல் பாகம்: ஸூறத்து பாத்திஹா—பகருவி லிருந்து ஸூறத்துன்னிஸா முடிய (ஒரு மன்ஸில்) 5¼ ஜுஸு வரை விலை ரூ. 10

இரண்டாம் பாகம்: ஸூறத்துல் மாயிதா முதல் ஸூறத்துத் தவ்பா முடிய விலை ரூ. 10

மூன்றாம் பாகம்: ஸூரே யூனுஸ் முதல் ஸூறத்துந் நஹ்ல் முடிய 7-ஸூருக்களின் தப்ஸீர் விலை ரூ. 10

நான்காம் பாகம்: ஸூரத்துல் இஸ்ராஉ முதல் ஸூறத்து நூர் முடிய. 8-ஸூராக்களின் தப்ஸீர் விலை ரூ. 10

ஐந்தாம் பாகம்: ஸூறத்து புர்க்கான் முதல் ஸூறத்து யாஸீன் முடிய 12-ஸூராக்கள். விலை ரூ. 12

ஆறாம் பாகம்: ஸூறத்து ஸாப்பாத் முதல் ஸூறத்து ஹுஜ்ராத் முடிய 13-ஸூராக்கள். விலை ரூ 12

ஏழாம் பாகம்: ஸூறே காப் முதல் ஸூறத்து நாஸ் வரை 41-ஸூருக்கள் விலை ரூ. 16

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

ஹஜ்ரத் 'க்வாஜா' முஈனுத்தீன் சிஷ்தி (ரஹ்) அவர்கள் ஜீவிய சரிதை.

(டி. எப். ரஹ்மத்துல்லாஹ்—மஆலி சாஹிப் (பாகவி)

16–ம் பாகம்

மகானை எதிர்க்க மந்திரவாதி நியமனம்.

நமது ஞான குரு மகான் ஹஜ்ரத் க்வாஜா மூஈனுத்தீன் (ரஹ்) அவர்களுக்கு, அஜ்மீரில் முதன் முதல் ஏற்பட்ட வெற்றி எது வென்றால்: ராம்தேவ் என்ற பூஜாரித் தலைவர், நமது மகானின் மகிமை யறிந்து, தாள் பணிந்து இஸ்லாத்தில் சேர்ந்து முஸ்லி மாகி மதம் மாறிப் போனது தான்.

அக்கால ஹிந்துக்களிலே, தங்களைச் சேர்ந்த ஒருவன் அதிலும் ஒரு பிரதம பூஜாரி, மதத்தை விட்டுப் பிரஷ்டமாகி முஸ்லிம்களுடன் போய்ச் சேர்ந்து விட்டார் என்ற விஷயம் காட்டுத் தீ போல் எங்கும் பரவி, குழப்பத்தை உண்டு பண்ணி விட்டது.

அஜ்மீரில் வாழும் வைதிகப் பிராம்மணர்களும், மதக் குரோத முள்ள ஹிந்து ஜனங்களும் சேர்ந்து, பஞ்சாயத்துக் கூடிப் பேசி, இது வரை தங்களைச் சேர்ந்தவரா யிருந்த ராமதேவ் சாஸ்திரியை, தங்கள் வாசஸ்தலத்தை விட்டு அடித்துத் துரத்தி விட்டார்கள்.

பிறகு அன்னா சாகர் என்ற இடத்து மற்ற பூஜாரிகள் சேர்ந்து, இனி இதற்கு என்ன செய்வதென்று சதியா லோசனை செய்ய லானார்கள். அதாவது: "இனியும் அந்த முஸ்லிம் பக்கீர்த் தலை வரை இப்படியே விட்டு விட்டால், அஜ்மீர் வாசிகளான ஹிந் துக்கள் அனைவருமே கெட்டுப் போவார்கள். அந்த முஸ்லிம் பக் கீரிடம் ஏதோ அபூர்வமான மந்திர—மாய சக்தி இருக்கிறது. இதை எப்படியாவது எதிர்த்துத் தீரவேண்டும்" என்று முடிவு செய்து வழி தேடிக் கொண்டிருந்தனர்.

முதன் முதலாக அன்னாஸாகர் என்னும் ஏரிக்கரை நாலா புறமும் கடுமையான காவல் ஏற்படுத்தி விட்டனர். எந்த முஸ்லிமும் பக்கீரும் வந்து தண்ணீர் எடுத்துச் செல்லக் கூடாது, தண்ணீர் குடிக்கவும் கூடாது என்று தடுப்பு ஏற்பாடு செய்து விட்டனர். இங்கு இப்படி இருக்க, அஜ்மீர் நகரிலும் ஒரே கொந்தளிப்பு தான்.

ராஜ சபையில் பேச்சு.

அஜ்மீர் நகர் முழுதும், மகா சக்தி வாய்ந்த ஒரு பக்கீரைப் பற்றி (நம்முடைய க்வாஜா சாஹிப் அவர்களைப் பற்றி)யே பேச்சாகி விட்டது. இந்தப் பேச்சு, ராஜாவுடைய மந்திரிப் பிரதானிகள், அதிகாரிகள் வரைப் போய்ச் சேர்ந்து விட்டது.

ராஜாவுடைய காதிலும் இந்த விஷயம் எட்டிற்று. தமது மேலதிகாரிகளையும் பிரதானிகளையும் அழைத்து 'இது என்ன சமாச்சாரம்?' என்று விசாரித்தார் அரசர்.

அதற்கு அரச சபையினைச் சேர்ந்த பிரதமர் சமாதானம் சொல்லலானார். அதாவது: "ஆம், ஒரு முஸ்லிம் பக்கீர் வந்திருக்கிறார். அவர் பெரிய மந்திரவாதி போல் தெரிகிறது. அவரை எதிர்ப்பதற்கு எந்த சிப்பாய்க்கும் தைரியம் வருவதில்லை. அவரை வீரத்தால் வெல்ல முடிய வில்லை. மந்திரத்தை மந்திரத்தால் தான் வெல்ல வேண்டும்" என்று கூறினர்.

இதைக் கேட்டு ராஜாவும் திக்பிரமை யடைந்தார். பெரிய மந்திரவாதியை அழைத்துக் கொண்டுவருவதற்காக ஏற்பாடு செய்யும்படி கட்டளை யிட்டார்.

ஹிந்துஸ்தானத்திலே அக்காலத்தில் அஜய்பால் என்றொரு மகா மந்திரவாதி இருந்தான். அவனுக்கு மகா ராஜாவின் சார்பாக அழைப்பு போயிற்று.

ராஜ ஆக்ஞையைக் கேட்டதும் மந்திரவாதி அஜய்பால், தன்னுடைய சிஷ்யர்களையும் கோஷ்டிகளையும் அழைத்துக் கொண்டு அஜ்மீர் வந்து சேர்ந்தான்.

மகா ராஜா, மந்திரவாதி அஜய்பாலை உபசரித்து வரவேற்று மரியாதை செய்து, வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொடுத்து விண்ணப்பித்துக் கொண்டதாவது:—

"குரு மகராஜ் ஒரு மிலேச்சனாகிய (முஸ்லிம்) பக்கீர், அன்னாசாகரில் வந்து இருந்து கொண்டு, நம் ராஜ்யத்தின் பிரஜைகளை மனக் குழப்படையும்படி செய்து வருகிறாராம். அவரை சிப்பாய்களாலும் எதிர்க்க முடிய வில்லையாம். நேரில் சென்று பார்ப்போர், மோடி மந்திரத்தால் நல்ல பாம்பு கட்டுப் பட்டு விடுவதைப் போல் கட்டுப்பட்டு, பணிந்து விடுகின்றனர். கோயில் பூஜாரி ராமதேவரும், அவர் காலில் விழுந்து பிரஷ்டனாகி மதம் மாறி, முஸ்லிமாகி விட்டானாம். எனவே, அந்த பக்கீர் மகா மந்திர தந்திர சக்தியுடைவர் என்பதில் சந்தேகமில்லை. எனவே தேவரீராகிய தாங்கள் போய்,

தங்கள் மகா மந்திர சக்தியால், அந்த மிலேச்சனை, இல்லாது ஒழித்து அன்னுசாகரின் புண்ணிய ஸ்தலத்தை காப்பாற்றி யருள வேண்டும்'' என்பதாம்.

எனவே, மந்திரவாதி அஜய்பால், ராஜாவுடைய உத்தரவையும் உபசாரப் பொருட்களையும் ஏராளமாகப் பெற்றுக் கொண்டு "அப்படியே செய்கிறேன், மகா ராஜா'' என்று சொல்லி விட்டு, அனுமதி பெற்று தர்பாரை விட்டு வெளியே வந்தான்.

ஹஜ்ரத் அவர்களின் தற்காப்பு.

மகாப் பெரும் மந்திரவாதியான அஜய்பால் என்பான், தன்னை எதிர்க்க வருகிருன் என்ற சமாசாரம், நமது ஹஜ்ரத் க்வாஜா முஈனுத்தீன் (ரஹ்) அவர்களுக்கு முன்னதாகவே தெரிந்து விட்டது.

முதலில் ஹஜ்ரத் அவர்கள் ஒளுவு செய்வதற்காக, அன்னு சாகர் ஏரியிலிருந்து தண்ணீர் கொண்டு வரச் செய்ய விரும் பினுர்கள். வேறு எங்கும் தண்ணீர் கிடையாது. ஹஜ்ரத் அவர்கள், தற்காப்பாக துணிந்து ஒரு அற்புத காரியம் செய்ய நாடினுர்கள்.

முன்னர் பூஜாரீ ராம் தேவாக இருந்து நவ் முஸ்லிமாகி தன்னு டைய அத்தியந்த சிஷ்யராகி விட்ட 'ஷாதி' என்பவரை அழைத்து "அன்பரே, இந்தா, என்னுடைய தோல் பை. எப்படியாவது ஏரிக்குப் போய், ஒரு பை நிறைய தண்ணீர் எடுத்துக் கொண்டு வாரும்; மற்ற காரியங்களைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம்'' என்று கட்டளை யிட்டார்கள்.

அங்ஙனமே, நவ் முஸ்லிமாகிய ஷாதி, தோல் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு ஏரிக் கரைக்குப் போனுர்.

காவல் காத்துக் கொண்டிருந்த சேவகர் எம்மட்டோ தடுத்துப் பார்த்தார்கள். எனினும் அவர், தங்களுக்கு முன்னர் குருவாக இருந்தவரல்லவா? எனவே கொஞ்சம் பின் வாங்கினர். இது தான் தருணமென்று அந்த நவ்முஸ்லிம், சட்டென்று ஏரியில் இறங்கி, ஹஜரத் அவர்களுடைய தோல் பை பாத்திரத்தில் 'பிஸ்மில்லாஹ்' என்று சொல்லி தண்ணீர் மொண்டுக் கொண்டார்.

என்ன ஆச்சரியம், ஏரியில் தண்ணீரெல்லாம் அந்தத் தோல் பை பாத்திரத்துக்குள் நுழைந்து விட்டதைப் போல், ஏரி முழு வதுமே காலியாகி வற்றிப் போய் விட்டது.

ஏரித் தண்ணீர் முழுதும் ஒரு கொடியில் வற்றிக் காய்ந்து போனதைக் கண்ட சிப்பாய்கள், ஓடிப்போய் இந்த சமாசாரத்தை

பெரிய பூஜாரியிடம் சொன்னார்கள். பூஜாரிகள் இதைப் போய் மகா மந்திரவாதி அஜய்பாலிடம் சொன்னார்கள்.

க்வாஜா சாஹிபும், அஜய்பாலும்.

நவ்முஸ்லிம் ஷாதி கொண்டு வந்து கொடுத்த தண்ணீரைக் கொண்டு, நமது ஹஜ்ரத் அவர்கள் ஒலுவு செய்து இரண்டு ரக்கஅத்து தொழுது கொண்டார்கள்.

தொழுது முடிந்த பின் தங்கள் சிஷ்யர்களையும் தோழர்களையும் பார்த்து "எல்லோரும் இப்படி என் அருகில் வந்து சேருங்கள்" என்றார்கள்.

எல்லோரும் ஒரு மொத்தமாக கூடிய பின், ஹஜ்ரத் அவர்கள், எல்லோரையும் அடைய வளைந்து ஒரு வட்டக் கோடு போட்டு 'சக்பந்தி' செய்து கொண்டு, "இனி நீங்கள் எதற்கும் பயப்பட வேண்டியதில்லை. இன்ஷா அல்லாஹ், எதிரிகளால் நம்மை ஒன்றும் செய்ய முடியாது" என்று தைரியம் சொல்லி விட்டுப் பேசாமல் ஜபதபத்தில் ஆழ்ந்து விட்டார்கள்.

இது இங்ஙனமிருக்க, மந்திரவாதி அஜய்பால், ஆட் படைகளோடும் மகா ஆடம்பரத்தோடும் அங்கு வந்து சேர்ந்தான். வந்து சேர்ந்ததும், பூஜாரிகளும் காவலாட்களும் எதிர் கொண்டழைத்து அந்த முஸ்லிம் பக்கீருடைய மாய சக்தியால், அன்னா சாகர் ஏரித் தண்ணீர் முழுதும் காய்ந்து போன விஷயத்தை எடுத்துரைத்தனர்.

இதற்கு என்ன செய்வதென்று அந்த மகா மந்திரவாதிக்கு ஒன்றும் புரியவில்லை. எனினும், சாது பக்கீருடைய ஜாகையை நோக்கிப் புறப்பட்டார்.

நம் ஹஜ்ரத் க்வாஜா சாஹிப் அப்போது அல்லாஹ்வுடைய தியானத்தில் அமர்ந்து கண் மூடி யிருந்தார்கள், வந்த புது ஆட்களையும் மந்திரவாதிக் கோஷ்டியையும் கண்ணெடுத்தும் பார்க்க வில்லை.

இதைக் கண்டு அஜய்பாலுக்கு மிசக் கோபம் வந்து விட்டது. நான் ஒரு பெரிய சக்திமான் வந்திருந்தும், இந்த சாது பக்கீர் நம்மைப் பொருட்படுத்த வில்லையே என்று ஆத்திரம் கொண்டான்.

ஹஜ்ரத் அவர்களை எதிர்ப்பதற்காக, அருகில் செல்லத் துணிந்தான்—அந்த மந்திரவாதி. ஹஜ்ரத் அவர்கள், கோடு போட்டு 'சக்பந்தீ' செய்திருந்ததால் அந்த மகா மந்திரவாதியாலும் அந்தக் கோட்டுக்குள் காலடி எடுத்து வைக்க முடிய வில்லை. வெகு நேரம் பிரயாசைப் பட்டு தோல்வி கண்ட அந்த மந்திரவாதி, "முஸ்லிம் பக்கீர் சாதாரணமானவரல்ல, ஒரு மகானாகவே இருக்க வேண்டு" மென்று மனதில் உறுதி கொண்டு, சற்று அருகில் நின்ற வண்ணம் தாழ்மையான முறையிலேயே வேண்டிக் கொள்ளலானான்:—

மந்திரவாதியின் மாயஜாலம்.

"ஐயா, பெரியவரே, முஸ்லிம் பக்கீரே, மகானே! தங்கள் திருச் சமுகத்தில் அடியேனின் ஒரு விண்ணப்பம்: தங்கள் மகிமையை நாங்கள் அறிந்து கொண்டோம். ஏரித் தண்ணீர் எல்லோருக்கும் பிரயோஜனமானது. எளிய பிரஜைகள் மீது இரக்கம் கொண்டு, பழைய படி ஏரியில் தண்ணீர் வரச் செய்யுங்கள்; ஜீவஜந்துக்களும் தங்கள் அனுக்கிரகத்தால் பிழைத்துப் போகட்டும்" என்று வேண்டிக் கொண்டான்.

புது மனிதனின் இரக்கமான வேண்டுகோளுக்கு ஹஜ்ரத் க்வாஜா சாஹிப் செவி சாய்த்தார்கள். உண்மையாகவே எல்லோர் மீதும் இரக்கம் கொண்டார்கள். பிறகு கண் திறந்து அந்த அஜய் பாலைப் பார்த்துச் சிரித்து விட்டு, தன்னுடைய ஆளான ஷாதியை அழைத்துக் கட்டளை யிட்டதாவது:—

"ஷாதி, முதலில் நமது எதிரிகள் நமக்கு தண்ணீர் கொடுக்க முடியாதென்று தடுத்தார்கள். இப்போது அவர்கள் நம்மிடமே தண்ணீர் வேண்டிக் கொள்வதால் கொடுத்து விடுவோம். இந்தத் தோல் பைத் தண்ணீரை, நீர் கொண்டு போய் பழையபடி ஏரியிலேயே கொட்டி விட்டு வாரும்" என்று கட்டளை யிட்டார்கள்.

நவ் முஸ்லிம் ஷாதி அப்படிச் செய்யவே, பழையபடி ஏரி தண்ணீர் பிரவாகத்தால் நிரம்பி விட்டது.

மந்திரவாதி அஜய்பால், தன்னுடைய மாயஜாலத்தைக் காண்பிக்கத் தொடங்கினன். ஏரிக் கரையில் போய், தன் மந்திர சக்தியினுல் மலையிலும் காடுகளிலும் வனங்களிலுமிருந்த பாம்புகளை எல்லாம் வரச் செய்து, எங்கும் வியாபிக்கச் செய்து விட்டான்.

நம் ஹஜ்ரத் க்வாஜா சாஹிப் இருக்கும் இடம் நோக்கி எல்லாப் பாம்புகளும் படை யெடுத்து வந்தன. ஆயினும் ஹஜ்ரத் அவர்கள் வட்டக் கோடு போட்டு, சக்பந்தி செய்த இடத்துக்கு நெருங்கியதும் அவை சுருண்டு விழுந்து மடிந்தன.

அங்ஙனம் மடிந்த பாம்புகள் அக்கினி ஜுவாலையாக மாறின. அந்த நெருப்பும் சக்திபந்திக்குள் செல்ல முடியாமல் அணைந்து அழிந்து போய் விட்டன ஒரு சிறு நெருப்புப் பொறி கூட நமது க்வாஜா சாஹிபை அணுக வில்லை. இதைக் கண்டு மந்திரவாதி அஜய்பால், திக்பிரமை கொண்டான்.

(தொடரும்)

18083.

யூனானி வைத்திய முறைகள்.

இரண்டாம் பதிப்பு

(தமிழில்)

இந்த புஸ்தகம் பல உர்து கிதாபுகளிலிருந்து சேகரிக்கப்பட்டு தமிழில் மொழி பெயர்த்து எழுதப்பட்டது.

இதில் மனிதனுக்கு வரக்கூடிய நோய்களை பல தலைப்புகளுக்கு அடியில் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு தலைப்புக்கும் அடியில் வரும் அநேக நோய்களுக்கும் பலவித மருந்துகள் கூறப்பட்டு இருக்கின்றன. இந்த மருந்துகள் நமது வீட்டிலேயே சொர்ப்ப செலவில் தயாரித்துக் கொள்ளக் கூடியவைகள், இதில் கூறப்பட்ட தலைப்புகள்:—

சிரசு சம்பந்தப்பட்ட நோய்கள், சரீர சம்பந்தப்பட்ட நோய்கள், தாது சம்பந்தப்பட்ட நோய்கள், பல்வேறு விஷங்களுக்கு பல்வேறு சிகிச்சைகள், மூலத்திற்கு பல்வேறு பாகங்கள், கழுத்து சம்பந்தப்பட்ட நோய்கள், காச சம்பந்தப்பட்ட நோய்கள், தோல் சம்பந்தப்பட்ட நோய்கள், பல்வேறு நோய்கள்.

இதில் குறிக்கப்பட்ட எல்லா நோய்களுக்கும் மருந்துகள் சொல்லப்பட்டிருக்கின்றன: சிலவிடங்களில் ஒரே நோய்க்கு சுமார் 40, 50 மருந்துகள் வரை விவரிக்கப்பட்டு இருக்கின்றன.

இந்த புஸ்தகம் ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டியது என்று சொல்ல அவசியம் இல்லை. 282-பக்கங்களைக் கொண்டது. கலிகோ பைண்டு செய்யப்பட்டது.

இதன் விலை ரூ. 3

கிடைக்குமிடம்:—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

அழகு ராணி-ஹுஸ்ன் ஆரா

டி. எப். ஆர். மஆலி சாஹிப் (பாகவி)

[4]

எனவே, "வாலிபனே, உன்னை நான் பாராட்டுகிறேன். உனக்கு ஆசீர்வாதம் அளிக்கிறேன். எனது மகள் ஹுஸ்ன் ஆராவை அடையப் பெறுவதற்கு நீ, ஒரு முக்கிய நிபந்தனையை நிறைவேற்ற வேண்டும்: இதற்கு நீ சம்மதப் படுகிறாயா?" என்று அரசர் கேட்டார்.

அதற்கு இளவரசன் ஹஸன் பாஷா "ஆஹா, அதற்கு முழு சம்மதம்; என்ன நிபந்தனையானாலும் நிறைவேற்றுகிறேன்" என்று பதில் கூறினான்.

மன்னர், இளவரசனை நோக்கி, "வாலிபனே, என்னுடைய அருமை மகள், அவளுக்காக உள்ள தனி அரண்மனையில், ஆறாவது மாடியில், தனது அம்ச தூளிகா மஞ்சத்தில், இரவில் படுத்து தூங்கிக் கொண்டிருப்பாள். அங்கு காவல்கள் அதிக மிருக்கும். அப்படிப்பட்ட நேரத்தில் நீ அங்கு, சந்தடியின்றி செல்ல வேண்டும். அரசிளங் குமரியின், மஞ்சத்துக்குப் பக்கத்தில் ஒரு மேஜை மீது ஒரு எலுமிச்சம் பழம் வைக்கப் பட்டிருக்கும். அதன் பக்கத்தில் ஒரு வாளாயுதம் இருக்கும். எனவே அந்த சயன அறையில், அரவ மின்றிச் சென்று அந்தக் கத்தியால், அந்த எலுமிச்சத்தை வெட்டி இரண்டு துண்டாக்கி விட்டு, தப்பித்து வந்து விட வேண்டும். இந்த முதல் பந்தயத்தில் யார் ஜெயித்து விட்டு வந்து விடுகிறாரோ அவரையே, அரசிளங் குமரி, மணந்து கொள்ள சம்மதப்படுவாள். அதன் பிறகே அவள், அவ்வாலிபனை தன் சமுகத்தில் அழைத்து, மற்றும் சில நிபந்தனைகளையும் சொல்லி அனுப்புவாள்" என்று அரசர் சொன்னார்.

இதைக் கேட்டு இளவரசன் ஹஸன் பாஷா, மிகவும் மகிழ்ந்தவனாக, "அரசனே, இதென்ன ஒரு பெரிய காரியமா? நான் சுலபத்தில் செய்து முடித்து, மற்றவைகளையும் செய்து முடிக்க பிரதிக்ஞை எற்றுக் கொள்வேன்" என்று சபதம் கூறினான்.

"வாலிபனே, உனக்கு என்னுடைய ஆசீ உண்டாகட்டும். அப்படியே செய்" என்றார்.

இளவரசன், அரசர்க்கு சலாம் செய்து, விடை பெற்றுச் சென்றான். ஆயினும் இளவரசன், சிந்தனையில் ஆழ்ந்தான். சந்தடியில்லாமல், இளவரசியின் அரண்மனைக்குள் ஆறுவது மாடிக்கு எப்படிச் செல்வது" என்று யோசிக்கலானான். சட்டென்று யோசனை தோன்றாதலால், சில தினங்கள் கழிந்து விட்டன.

ஆழ்ந்து சிந்தனை செய்து கொண்டிருந்த இளவரசனுக்கு, சுருக்கென்று ஒரு விஷயம் ஞாபகம் வந்தது. துள்ளிக் குதித்து எழுந்தான், "நான் என்ன மாதிரியான முட்டாள்? கையில் வெண்ணெய் வைத்துக் கொண்டு நெய்க்கு அழுவதா? முன்னர் அந்த பக்கிர் பாபா கொடுத்த "பாதக் குரடு" என்னும் 'கடாவான்' கையில் இருக்கும் போது நான் ஏன் கவலைப்பட வேண்டும்?" என்று வாய் விட்டுக் கூறினான்.

* * * *

அன்று பொழுது சாய்ந்து இரவு நேரம் வந்தது. இரவு 12–மணியாயிற்று. ஊர் அடங்கியது. எல்லோரும் தூங்கும் நேரம். அப்போது இளவரசன் தன்னிடமுள்ள அபூர்வ பொருளாகிய கடாவான் என்னும் 'கால் கட்டை'யை வெளியே எடுத்தான். 'பிஸ்மில்லாஹ்' என்று சொல்லி அல்லாஹ்வை நினைத்து, பாதரக்ஷை மீது ஏறி நின்று, "அழகு ராணியின் அரண்மனையில் ஆறுவது மாடிக்குச் செல்" என்று கூறினான். உடனே, அந்த பாதரக்ஷை அவனை ஆகாய மார்க்கமாய் கொண்டு சென்றது.

அடுத்த க்ஷணத்தில், இளவரசன் ஹஸன் பாஷா, அழகு ராணியின் அந்தப்புரத்தில் இருந்தான். ஹூஸ்னு ஆரா அதிலாவண்யத்தோடு, மெய் மறந்து, தன் அம்ச தூளிகா மஞ்சத்தில், படுத்து அயந்து தூங்கிக் கொண்டிருந்தாள்.

அவள் அழகைக் கண்டு அவனே சொக்கி விட்டான். அவளையே சிறிது நேரம் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்ததால், வந்த வேலையையும் மறந்து விட்டான். எனினும் உணர்வு பெற்று வந்த காரியத்தை துரிதமாய் நிறைவேற்றலானான்.

அரசகுமாரி தூங்கிக் கொண்டிருந்த கட்டிலுக்குப் பக்கத்திலேயே, மேஜையொன்று இருந்தது. அதன் மீது ஒரு எலுமிச்சம் வைக்கப் பட்டிருந்தது. அதன் பக்கத்திலிருந்த வாளாயுதத்தை எடுத்தான். மெல்ல சப்தமிட்டு எலுமிச்சம் பழத்தை ஒரே வெட்டில் இரண்டாக வெட்டினான். வாளாயுதத்தை அங்கேயே வைத்து விட்டு, போவதற்குப் புறப்பட்டான்.

அப்போது சட்டென்று இராஜகுமாரி கண் விழித்துக் கொண்டாள். உடனே அவள் எழுந்து, தன் பக்கத்தில் தயாராக வைத்திருந்த வில்லையும் அம்பையும் எடுத்துக் கொண்டு, "யார் அது?" என்று சப்தம் போட்டாள். இளவரசன், பேசாமல் ஓடத் தொடங்கினான். அவள் கொஞ்சமும் தயங்காமல், வில்லில் அம்பைப் பொருத்தி குறி பார்த்து, எய்தினாள். இளவரசன் ஓடிக் கொண்டிருந்ததால், அந்த அம்பு சரேலென்று, இளவரசனின் முதுகில் பாய்ந்து பொத்திக் கொண்டது. இரத்தம் வழிந்தது. எனினும் அவன் மாயக் குரடு மீது இருந்ததால் ஒரு க்ஷணத்தில் மறைந்து தப்பித்துப் போய், தான் தங்கியிருக்கும் சத்திரத்தில் போய்ச் சேர்ந்தான்.

* * * *

இளவரசன், சத்திரத்தில் வந்து முதுகில் பாய்ந்திருந்த அம்பை எடுத்து, காயத்துக்கு மருந்து போட்டு கட்டு கட்டிக் கொண்டான். அவனுக்கு, அந்த அழகு ராணியின் துணிச்சலான செயலைக் கண்டு பேராச்சரியமாய் இருந்தது. "அவள் ஏன் என்னை அம்பால் எய்து காயப்படுத்தினாள்? அவள் போட்ட நிபந்தனைப் பிரகாரம் தானே நான், எலுமிச்சம் பழத்தை வெட்டினேன். இதில் தவறு என்ன இருக்கிறது? அவள் ஏன் என்னை இம்சிக்க வேண்டும்," என்று யோசிக்கலானான்.

மறுநாள், ஊரெங்கும் இதே பேச்சாய் விட்டது. "யாரோ ஒரு வீரன், நேற்றிரவு, அழகு ராணியின் அந்தப் புரத்தில் போய், எலுமிச்சம் பழம் வெட்டும் சபதத்தை நிறைவேற்றி விட்டு, தப்பித்துப் போய் விட்டான். ஆனால் இது வரை அவன் யார் என்பது தெரிய வில்லையாம். இதை அரசர் அறிய விரும்பி 'அழைப்பு' விடுத்திருக்கிறாராம்."

ஏற்கெனவே, அரசகுமாரி அழகு ராணியை அடைவதற்கு, அரண்மனையைச் சூழ கூடாரமடித்துக் காத்துக்கிடக்கும் நூற்றுக் கணக்கான சிற்றரசர்களுக்கும் பேர் வழிகளுக்கும் இந்த சமாசாரம் தெரிய வந்தது. அவர்களில் ஒருவருமே இந்தத் துணிச்சலான காரியத்தை சாதிக்காமலிருக்க, ஒவ்வொருவனும் "இந்தக் காரியத்தை நானே செய்தேன்" என்று அரசரிடம் கூறி அழகு ராணியை வெகு சுலபமாக மணந்து கட்டிக் கொண்டு போய் விடலாமென்று முடிவு செய்து கொண்டிருந்தான்.

அரசர் பிரகடனப்படுத்தி யிருந்த அழைப்புக் கிணங்கி, அரச சபைக்கு அநேகர் போனார்கள். ஒவ்வொருவனும் "இதை நானே செய்தேன்" என்று சொல்லலானான். அரசர்க்கு என்ன செய்வ தென்றே புலப்பட வில்லை.

இதை யெல்லாம், மேல்மாடி உப்பரிகையி லிருந்து அரசகுமாரி ஹுஸ்ன் ஆரா பார்த்துக் கொண்டிருந்தாள். இவர்களின் கையா லாகாத் தன்மையைக் கண்டு அவளுக்கு சிரிப்பு வந்து விட்டது.

அரசர் இன்னது செய்வதென்று புரியாமல், இளவரசியிடம் சென்று "இங்ஙனம் எல்லாருமே, இரவில் வந்து எலுமிச்சம் பழம் வெட்டியது நானே என்று சொல்கிறார்களே, இதற்கு என்ன பரிகாரம் செய்வது?" என்று கேட்டார்.

அரசிளங்குமரி இன்னும் அதிகமாய் சிரித்து விட்டு சொன்னதாவது:—"அப்பா ஜான்! இதைக் கண்டு பிடிப்பது ஒரு பிரமாதமில்லை. இனி, தங்களிடம் வந்து, 'எலுமிச்சம் வெட்டியது நான் தான்" என்று எவனேனும் கூறினால் உடனே அவனது மேல் சட்டையைக் கழற்றி, முதுகில் அம்பு பட்ட காயம் இருக்கிறதா என்று பாருங்கள். அப்படி முதுகில் அம்பு பட்ட காயம் இல்லாது போனால் அவனை செருப்பினால் ஐந்து அடி கொடுத்து துரத்தி விடுங்கள். எந்த வீரனுடைய முதுகில் அம்பு காயம் இருக்குமோ அவனே உண்மை வீரன்; அவனைப் பாராட்டுங்கள்" ஆனால் இந்த உள் மர்மத்தை வெளியில் சொல்லாமல் செய் யுங்கள். அப்போது தான் உண்மை வெளியாகும். விஷயம் வெளி யாகி விட்டால், என் மீது மையல் கொண்ட உலுத்தன் எவனும் வேண்டு மென்றே முதுகில் அம்பு குத்தி பொய்க்காயத்தை உண் டாக்கிக் கொண்டு வந்துகாட்டி, என்னை வலிய இழுத்துக் கொண்டு போய் விடுவான்" என்று உபாயம் சொல்லிக் கொடுத்தாள்.

அரசர் தன் செல்வக் குமாரியின் புத்திசாதுர்யத்தையும் தைரியத்தையும் கண்டு ஆச்சரியப்பட்டார். அப்படியே செய் வதாகச் சொல்லி விட்டு, தர்பாருக்குப் போய்ச் சேர்ந்தார்.

* * * *

'எலுமிச்சம் பழம் வெட்டியதாக எத்தனையோ பேர் சொல்லிக் கொண்டு காத்திருந்தனர். அரசர் ஒவ்வொருவராக அழைத்து கேட் பார். உடனே சிப்பாய்கள், அவனது முதுகைத் திறந்து பார்ப்பர். அம்புக்காயம் இல்லாதவனுக்கு, ஐந்து செருப்பு அடி கொடுத்து, கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளி விடுவர். இவ்வாறாக எத் தனையோ பேர் வாய்ச்சவடாலோடு தர்பாருக்கு வந்து, முதுகை காட்டி, செருப்படி பெற்று அவமானப்பட்டு போய் விட்டனர்.

இவ்வாறே செருப்படி மரியாதை பல நாள் நடை பெற்றதால், பொய்யர்களின் வருகை முடிவடைந்து விட்டது. வீணாக செருப் படி பட்டுப் போக யாரும் துணிந்து வரவில்லை.

இதை யெல்லாம் வெளியே இருந்து நம் வீர இளவரசன் ஹஸன் பாஷா அறிந்து தெரிந்து கொண்டு தான் இருந்தான்

இறுதியாய், இளவரசன் ஒருநாள், அரசசபையில் போய், மன்னர் திருமுன் நின்று 'ஸலாம்' செய்தான். அரசர், இவனை முன்னரே அறிந்திருந்ததால், இவனை வரவேற்று உபசரித்தார்:—

"வாலிபனே, என்ன சமாசாரம்" என்று கேட்டார். வாலிபன் மற்றவர்களைப் போல வந்தும் வராததுமாய், "நான் இளவரசியின் அந்தப்புரத்தில் போய் எலுமிச்சம் பழம் வெட்டினேன்" என்று பதட்டமாய் கூருமல், அமைதியாக அமர்ந்திருந்தான். எனவே அரசருக்கு இவன் விஷயத்தில் ஏதோ விசுவாசமும் நம்பிக்கையும் ஏற்பட்டு, அருகில் அழைத்து "ஏதேனும் சொல்ல வேண்டியிருந்தால் தைரியமாய் சொல்லலாம்" என்று சொன்னர்.

அதன் பிறகே இளவரசன், "அரசே, அந்தக் காரியத்தை நானே செய்தேன். எனக்கு இது ஒரு பிரமாதமான காரியமில்லை யாதலால், நான் மற்றவர்களைப் போல் அவசரப்படவில்லை" என்று சொன்னன்.

இவ்விள வாலிபனின் விஷயத்தில் அரசர்க்கும் பிரதானிகளுக்கும் நம்பிக்கை ஏற்பட்ட தெனினும், பிரத்தியக்ஷ பூர்வமாய் அம்புக்குறி முதுகில் பட்டிருக்கிறதா என்று பார்த்தறிய வேண்டு மல்லவா?

அதற்கு அரசர், இளவரசனை அழைத்து, "தயவு செய்து நீ உன் முதுகில் அம்புக்குறி காயம் இருக்கிறதா வென்பதை காட்ட முடியுமா?" என்று கேட்டார். இதற்கு இளவரசன்," அரசனே! முதுகைக் காட்டுவது வீரனுக்கழகல்ல. நான் முதுகை இந்த சபையின் முன்காட்டத் தயாராய் இல்லை. என் முதுகை என்தாயார் மட்டும் தான் கண்டிருக்கிருள். அடுத்தபடியாய் எனக்கு மனைவியாகப் போகிறவள் தான் காண வேண்டும். ஆனல் தாங்கள் என் தந்தைக்கு சமானமாக இருப்பதால் தங்களுக்கு மட்டும் நான் காட்ட தயாரா யிருக்கிறேன்" என்று சொன்னன்.

இதற்கு அரசர் இணங்கி, இளவரசனை தனிமையில் அழைத்துப் போய் பார்த்தார். இதை தூரத்திலிருந்து அழகு ராணியும் கண்டாள். இருவரும் மிகவும் திருப்தி யடைந்தனர்.

அதன் பின்னர், அரசர் கட்டளைப்படி பகிரங்க விளம்பரம் செய்யப்பட்டது. "இரவில் இளவரசியின் அந்தப்புரம் சென்று எலுமிச்சம் பழம் வெட்டி முதல் சபதம் ஜயித்த வாலிபர், கண்டு கொள்ளப்பட்டார்" என்று முரசு அடிக்கப்பட்டது. ஊரெல்லாம் சந்தோஷ ஆரவாரம் எழுந்தது. அரண்மனையில் குதூகலம் உண்டாயிற்று. அரசர்க்கும் சந்தோஷம் உண்டாயிற்று; இளவரசி அழகு ராணிக்கு மனதில் உள்ளூர வெட்கம் உண்டாயிற்று.

* * * *

அடுத்தபடியாய், இளவரசன் ஹஸன் பாஷா, அரசரிடம் அணுகி, "அரசே, தங்கள் தயவினல், தங்கள் குமாரியின் முதல்

நிபந்தனையை நிறைவேற்றி விட்டேன். இனி, அடுத்த நிபந்தனைகளையும் தெரியப்படுத்துங்கள். ஆண்டவன் உதவியால் அதையும் நிறைவேற்றி முடிக்கிறேன்'' என்று வேண்டிக் கொண்டான்.

அதற்கு அரசர், இளவரசனை நோக்கி, ''பிள்ளாய்! நீ முதல் நிபந்தனையை எளிதில் நிறைவேற்றியதைப் போலவே, மற்றிரு நிபந்தனைகளையும் நிறைவேற்றுவாய் என்பதில் சந்தேகம் இல்லை. என் குமார்த்தியின் அடுத்த நிபந்தனைகள் யாதெனில்: 1–வது நிபந்தனையை (அந்தப்புரம் சென்று எலுமிச்சம் பழம் வெட்டி வரும் சபதத்தை) நீ நன்கு நிறைவேற்றி விட்டாய். 2–வது நிபந்தனை 'குல்பரீ' என்னும் புஷ்பக் கன்னியைப் பற்றியதாகும். அந்தக் குல்பரீயின் கலியாணத்துக்காக அவளுடைய தகப்பனுர், மிகுந்த பிரயாசைப்பட்டுப் பெரும் பணம் செலவிட்டு, செம்பவளங்களாலான ஒரு சிவிகை(பல்லக்கு)தயாரித்திருக்கிருர். அந்தப் பல்லக்கை நீ, என்னுடைய மகள் ஹுஸ்ன் ஆராவுக்காக கொண்டு வந்து கொடுக்க வேண்டும். என் மகள் கலியாணமான பிறகு அந்த பவளப் பல்லக்கில் அமர்ந்து தான், இங்கிருந்து புறப்பட்டு உன்னுடன் பவனி வருவாள். நீ இந்த இரண்டாவது நிபந்தனையைப் பூர்த்தி செய்த பின், மூன்ருவது நிபந்தனை தெரிவிக்கப்படும்'' என்று சொல்லி முடித்தார்.

இதைக் கேட்டு இளவரசன் மிகத் திருப்தி யடைந்து ''இறைவன் அருளால் இதையும் நிறைவேற்றிப் பல்லக்கு கொண்டு வருகிறேன்'' என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டான் இளவரசன் ஹஸன் பாஷா.

* * * *

பிறகு இளவரசன், தன் இருப்பிடமான சத்திரத்துக்கு வந்து சேர்ந்தான். இங்கு பரிசாரக மாது, இளவாலிபன் சுகமே திரும்பி வந்ததைப் பார்த்து மிகவும் சந்தோஷப் பட்டாள். ''பிள்ளாய், போன காரியம் ஜெயம் தானு? இன்னும் எத்தனை நாளைக்கு தங்கியிருப்பாய்? இன்னும் ஏதேனும் காரியம் சாதிக்க வேண்டுமா?'' என்று கேட்டாள்.

இளவரசன், அரண்மனை சென்று மன்னரைக் கண்டு பேசியதையும், இளவரசியின் அந்தப்புரம் சென்று முதல் நிபந்தனையை நிறைவேற்றி வந்ததையும் விபரமாகக் கூறினுன். ''அடுத்த படியாய் 'இரண்டாவது நிபந்தனையை நிறைவேற்றி புஷ்பக் கன்னிக்குரிய செம்பவளப் பல்லக்கை கொண்டு வரப் போகிறேன்?'' என்று கூறினுன் இளவரசன்.

(தொடரும்)

Edited by M. S. ABDUL KHUDUS.
Published by Hajee M. A. Shahul Hameed & Sons.
Printed at Shahul Hameedia Press, Madras.

47983

முரீது உபதேசம்

இதில் அடங்கியுள்ள விஷயங்களாவன:—உண்மை பக்கீர்கள் யார் இராதத்—முரீத்—முருதத் விபரம், முரீத் யென்பவர் யார்? தஸவ்வுப் விபரம், முரீதின் ஆரம்ப நிலை, ஷேக் சன்னிதானத்தில் முரீதின் மரியாதை, முரீதுக்கு ஷைக் ஆதரவு, சமா என்னும் புகழ் பாடக் கச்சேரி விபரம் முரீதுக்கு பீர் ஸாஹிபிடம் இருக்க வேண்டிய பயபக்தி, முரீதுக்கு ஷைக் ஸாஹிபின் உபதேசப் பயிற்சி விதம், சகோதர வாஞ்சையும் ஏனைய பழக்க உபசாரங்களும், அக்கியர் சேர்க்கை, செல்வந்தர் சேர்க்கை, பகீர்களுடன் சேர்க்கை வைத்தல், பகீர் ஸாஹிபின் எளிமைச் சிறப்பு, பகீரும் சுவால் செய்தலும், பகீர் சுகானுபவ ஒழுக்கம், பகீர் சாப்பாட்டு ஒழுக்கங்கள், தோழருடன் உபசார முறை, பிள்ளை குட்டிகளுடன் பகீரின் பழக்காசாரமுறை, பிரயாணத் தில் பகீர்கள் எவ்வாறு ஒழுக வேண்டும், பகீர் ஸாஹிபு இராகம் செவியுறுதல், முஜாஹிதா (தவப்பா யுத்தம்) விபரம், முஜாஹிதாவின் தாத்பரியம், முஜாஹிதாவை பூர்த்திக்கும் அம்சங்கள், ஆண்டவன் மஃரிபத், ஷைத் தானைப் பற்றிய எச்சரிக்கை, நப்ஸ் எச்சரிக்கை, ஆண்டவன் பயபக்தி, மஹான்களின் பழக்க ஆசாரங்கள், தவக்கல் என் னும் நம்பிக்கை, நற்குண சீலங்கள், ஆண்டவன் சந்நிதானத் தில் நன்னடத்தை, ஷுக்ரு (நன்றி) விபரம், ஸப்று விளக் கம், ரிஜா (சம்மதம்) உண்மை விளக்கம், பரிசுத்தம், தௌபாச் செய்தல், இராக் கால வணக்கம், நபி பெருமா னரின் இராத் தொழுகை, தனிமையில் உபதேசித்தல், உபதேச ஷாத்துகள், நப்ஸும் ஆத்மாவும், தங்கள் ரியாஜத், குத்பு நாயகத்தின் துஆ, மதக் கல்வி முதலியவைகளை விரி வாய் விபரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு முஸ்லிமும் இப் புத்தகத்தை வாங்கி படித்து பிரயோஜன மடைவது அத்தி யாவசியம். இதன் விலை ரூ. 1–52

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்.

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

நஸ்ஹுல் ஹதீது, வபத்ஹுல் மஜீத்

புதிய இரண்டாம் பதிப்பு

இவ்வுலகில் இன்ஸானாகப் பிறந்த ஒவ்வொருவரும், சிருஷ்டிக்கர்த்தாவாகிய அல்லாஹு தஆலாவை அறிந்து ஹகீகத்தை உணர்ந்து இபாதத்து செய்ய வேண்டியது அத்தியாவசியக் கடமை. இதற்கு இல்மு, ஒழுக்கம், ஈமான், இஸ்லாம், அமல், ஷரீஅத் முதலிய முஆமலாத்துகளைத் தெரிந்து கொள்ள வேண்டியது முதற்பெரும் கடமையாகும்.

இந்த அரிய பெரிய நூலாகிய "நஸ்ஹுல் ஹதீது வபத்ஹுல் மஜீது" என்பது நமது நபிகள் நாயகம் ரஹ்மத்துல்லில் ஆலமீன் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவாய் மலர்ந்தருளிய ஹதீதுகளென்னும் திருவாக்கியங்களைக் கொண்டும், ஸஹாபாக்கள், ஒலிமார்கள் ஸாலிஹீன்கள் நாதாக்களுடைய நஸீஹத்துகள், ஹிக்காயத்துகள் முதலிய உபதேச உபமேய ஆகமங்களை ஆதாரமாகக் கொண்டும், தீனுல் இஸ்லாத்தின் எல்லா மஸ்அலாக்களையும், விஷயங்களையும் தத்துவங்களையும் எடுத்தோதும் அற்புதமான நூலாகும். இந்த ஒரு கிதாபு மட்டும் கையில் யிருந்து விட்டால் தமிழ் முஸ்லிம்களுக்கு வேறெந்த கிதாபின் தேவையும் இராது. அதாவது இதில் இல்லாத விஷயமே இல்லையென்று சொல்லலாம். இதன் அருமை நேரில் பார்த்தாலே தெரிய வரும்.

இதன் விலை ரூ. 9-60

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5,